பக்கங்கள்: 12 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2052 ஐப்பசி 20 சனிக்கிழமை 06.11.2021 கதிர் 01

### இனி இது ரகசியம் அல்ல!

ஸ்கொட்லாண்ட் 'விசிட்' முடித்துக் கொண்டு நாடு திரும்பி விட்டார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ.

ஆனால், உடனடியாகக் கவனிக்க வேண்டிய பல சில்லெடுப்புகள் அவருக்குக் காத்துக் கிடக்கின்றன என்கின்றன

பக்கம்02 »

# ஹக்கீமும் மனோவும் சம்பந்தனுடன் பேச்சு

## மீண்டும் நாடாளுமன்றில் சந்தித்துப் பேச முடிவு





(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், நவ.06

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனை தமிழ் முற்போக்கு முன்னணியின் தலைவரான மனோ கணேசனும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமும் நேற்று மாலை அவரது இல்லத்தில் சந்தித்துக் கலந்துரையாடினர். மீண்டும் நாளை மறுதினம் முதல் நடைபெறும் நாடாளுமன்ற அமர்வுகளுக்கு இடையில் தமிழரசு மற்றும் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுடன், தமிழ்ப் பேசும் தரப்புகள் ஐக்கியப்பட்டுச் செயற்படும் முயற்சி குறித்துப் பேசுவதற்கு இந்தச் சந்திப்பில் முடிவு செய்யப்பட்டதாக அறியவந்தது.

☞2

# மீண்டும் அச்சுறுத்தும் கொரோனா; நேற்று 627 பேருக்கு தொற்று உறுதி

## மேலும் 15 பேர் உயிரிழப்பு

இலங்கையில் நேற்று 627 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதற்கமைய நாட்டில் இதுவரை அடையாளம் காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 44 ஆயிரத்து 12 ஆக எகிறியுள்ளது என அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அத்துடன் கொரோனாத் தொற்றிலிருந்து மேலும் 339 பேர் குணமடைந்துள்ளனர்.

அதன்படி நாட்டில் இதுவரை 5 இலட்சத்து 14 ஆயிரத்து 573 பேர் கொரோனாத்

☞12

# வரும் நாள்களில் சவால்கள் கூடும்

## ஹேமந்த ஹேரத் எச்சரிக்கை



அனைவரும் ஒன்றிணைந்து கொரோனா வைரஸ் தொற்றை ஒழிக்கும் செயற்பாடுகளை முன்னெடுக்காவிட்டால், எதிர்வரும் நாள்களில் மேலும் பல சவால்களை எதிர்கொள்ள நேரிடும்.

– இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார் சுகாதார

☞2

## தடுப்பூசி அட்டையை கட்டாயமாக்க ஆராய்வு

இலங்கையில் பொது இடங்களில் கொரோனாத் தடுப்பூசி அட்டையைக் கட்டாயமாக்குவது தொடர்பில் ஆராய்ந்து வருவதாக சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார்.

இலங்கைக்கான கனேடியத் தூதுவருடன் நேற்று நடைபெற்ற சந்திப்பின்போதே சுகாதார அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

கனடாவில் பொது

☞2

# போராட்டங்களால் தொற்றுப் பரவினால் நாட்டை இரு மாதங்கள் முடக்க நேரிடும்!

## எச்சரிக்கின்றது ஆளுநந்தரப்பு



நாட்டில் அரசியல் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்ட போராட்டங்கள் மீண்டும் தீவிரமடைந்துள்ளன. இந்தப் போராட்டங்களால் கொரோனாத் தொற்று உச்சமடைந்தால் இன்னும் இரண்டு மாத காலத்துக்குள் நாட்டை மீண்டும் முடக்க நேரிடும். மீண்டுமொரு நாடு தழுவிய முடக்கம் பொருளாதாரத்துக்கு மாத்திரமல்ல நாட்டு மக்களுக்கும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும்.

– இவ்வாறு ஸ்ரீலங்கா

☞2

## இன்று 6ஆவது ஆண்டில் உங்கள் காலைக்கதிர்

Kalaikkathir

## நிர்வாகியின் மனத்திலிருந்து...



சி.அனுராஜ்
(நிர்வாக இயக்குநர்)

தமிழ் இதழியல் துறையில் ஆரம்பிக்கப்பட்டு ஐந்து ஆண்டுகளிலேயே உள்ளூரில் மட்டுமல்லாமல், சர்வதேச ரீதியிலும் தமிழர்களுக்கென தனித்துவமாக – தமிழர்களின் ஓர் ஊடக சக்தியாக வியாபித்து – அன்புக்குரிய வாசகர்களின் நெஞ்சங்களில் நிறைந்திருக்கும் 'காலைக் கதிர்' பத்திரிகையின் நிர்வாக இயக்குநராகப் பெருமை கொள்கிறேன்.

☞12

## சமுதாயப் பொறுப்பும் கடப்பாடும் காலைக்கதிருக்கு அதிகம் உண்டு

### சுட்டிக்காட்டி பிரதமர் மஹிந்த வாழ்த்து



"இந்த நாட்டில் அமைதி, சமாதானம், ஐக்கியம், அபிவிருத்தி ஆகியவற்றின் மேம்பாட்டிற்கு உழைக்க வேண்டிய பெரும் பொறுப்பும் கடப்பாடும் காலைக் கதிர் நாளிதழுக்கு உண்டு."

– இவ்வாறு காலைக்கதிர் நாளிதழின் ஐந்தாம் ஆண்டு நிறைவையொட்டித் தாம் அனுப்பி வைத்த வாழ்த்துச் செய்தியில் பிரதமர் மஹிந்த

☞12

### தொல்பொருள் சின்னத்தைத் தேடிச் சென்ற

## இராஜாங்க அமைச்சருக்கு காரைநகரில் கடும் எதிர்ப்பு



(ந.லோகதயாளன்)

யாழ்., காரைநகர்ப் பகுதியில் உள்ள வேரம்பிட்டி கிராமத்தில் ஒரு தொல்பொருள் சின்னம் இருக்கின்றது எனக் கூறி இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க அந்த இடத்துக்கு நேற்று வருகை தந்தமையால் அப்பகுதி மக்கள் கூடி கடும் எதிர்ப்பு நடவடிக்கையில்

☞12

# பெரும் போராட்டத்துக்கு தயாராகின்றது எதிரணி



அரசுக்கு எதிராக மாபெரும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றை நடத்துவதற்குப் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தயாராகி வருகின்றது.

எதிர்வரும் 16 ஆம் திகதி குறித்த போராட்டத்தை கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சித்

☞12

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உள்வீட்டு வட்டாரங்கள்.

கெம்பிக் கொண்டு நிற்கும் கூட்டணியின் பங்காளிக் கட்சிகள் குறித்து அவர் ஒரு தீர்மானம் எடுக்க வேண்டும். அமைச்சரவைக் கூட்டுப் பொறுப்புக்கு மாறாக, அமைச்சரவை முடிவுகளைப் பகிரங்க வெளியில் விமர்சித்து வரும் விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில்ல, வாசுதேவ நாணயக்கார ஆகியோரின் போக்குக்கு எதிராக ஏதாவது செய்தாக வேண்டும் என்ற கட்டாயம் ஜனாதிபதிக்கு. இவ்விடயத்தில் உரிய ஒழுங்கு நடவடிக்கை எடுக்க அவர் தவறுவாராயின் எதிர்காலத்தில் தமது மொட்டுக் கூட்டணி அரசை ஒழுங்கு முறையாகக் கொண்டு நடத்த முடியாத இக்கட்டு அவருக்கு நேரும்.

மொட்டுக் கூட்டணியின் பங்காளிக் கட்சித் தலைவர்கள்தான் இப்படி என்று பார்த்தால், அவரது வலதுகை, இடதுகை, அள்ளக்கையாக இருக்கும் அவரது முக்கிய அமைச்சர்களே குழப்பத்தின் உச்சியில் இருக்கின்றனர் என்று கூறப்படுகின்றது.

ஸ்கொட்லாண்ட் கிளாஸ்கோ நகரில் ஜனாதிபதி கோட்டாபய பங்கு பற்றிய சூழலியல் மாற்றங்கள் பற்றிய சர்வதேச மாநாட்டு அரங்கின் விரிவுரை மண்டபத்தில், கோட்டாபய உரையாற்றிய சமயம் அவருடன் மேலும் ஒரு பிரதிநிதி அங்கு உள்செல்லவே அனுமதிக்கப்பட்டிருந்தது. அவருடன் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸே செல்வார் என பெயர் குறிப்பிட்டிருந்தது. ஆனால் இலங்கை வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அட்மிரல் கொலம்பகே – ஜனாதிபதிக்கு மிகவும் நெருக்கமானவர் – தம் பாட்டில் மேற்படி வெளிவிவகார அமைச்சரின் பெயரை வெட்டி, ஜனாதிபதியின் ஆலோசகர் லலித் வீரதுங்கவின் பெயரைச் சேர்த்துக் கொண்டிருக்கின்றார் என்று கூறப்படுகின்றது. இது பேராசிரியர், ஜி. எல்.பீரிஸையும் பெரும் சீற்றத்தில் ஆழ்த்தியிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேசமயம், கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தமது அமைச்சின் செயலாளர் மீது செம கடுப்பில் இருக்கின்றார் என்று தகவல். ஒன்றில் அவர் கல்வி அமைச்சின் செயலாளராக இருக்க வேண்டும், இல்லையேல் தாம் கல்வி அமைச்சராக இருக்க வேண்டும், இதில் ஒன்று மட்டுமே சாத்தியமாகும் என ஜனாதிபதியை நேரில் சந்தித்துக் கூற தினேஷ் குணவர்த்தனா தயாராக இருக்கின்றார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. ஜி.எல். பீரிஸ் கல்வி அமைச்சராக இருந்த போதும் இதே செயலாளருடன் இத்தகைய முரண்பாடு நீடித்ததாகக் கூறப்படுகின்றது.

'ஒரே நாடு – ஒரே சட்டம்' என்ற ஏற்பாட்டை நடைமுறைப்படுத்துவதற்கான ஜனாதிபதியின் செயலணியின் தலைவராக வண. ஞானசார தேரர் நியமிக்கப்பட்டமையை ஆட்சேபித்து நீதி அமைச்சர் அலி சப்ரி தமது பதவியைத் துறக்கக் காத்திருக்கின்றார். இது குறித்து ஜனாதிபதி கோட்டாய ராஜபக்ஷவைச் சந்தித்து தன் இராஜினாமாவைக் கையளிப்பதற்கு அலி சப்ரி தயாராக உள்ளார் எனத் தெரிகின்றது.

இவ்வாறு பல அமைச்சர்கள் சீறிக் கொண்டும் கறுவிக் கொண்டும் இருக்கின்றனர்.

சில தினங்களுக்கு முன்னர் மொட்டுக் கட்சி ஆரம்பித்து ஐந்து ஆண்டுகள் நிறைவு பெறுகின்றமையை ஒட்டி ஒரு பொது நிகழ்வு நடைபெற்றது. அதில் பேசிய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் உரையைக் கேட்டு தென்னிலங்கை மெய்சிலிர்த்துக் கொண்டது என்று தகவல். பிரிந்து நிற்கும் பங்காளிக் கட்சிகளை உரிய மரியாதை கொடுத்து தம் பக்கம் இழுக்கும் வசீகரப் பேச்சு அது.

ஆனால், அந்தப் பேச்சு ஸ்கிரிப்ட் குறித்து நேரத்துடன் கேள்விப்பட்ட ஜனாதிபதி தரப்பைச் சேர்ந்த பிரமுகர்கள் சிலர், பிரதமரின் உதவியாளர்களுடன் முற்கூட்டியே தொடர்பு கொண்டு, உரையின் சில பிரதான பகுதிகளை நீக்கம் செய்ய வற்புறுத்தினராம். ஆனால் பிரதமர் தரப்பு கிஞ்சித்தும் விட்டுக் கொடுக்கவில்லை. அது ஜனாதிபதி தரப்புக்கு சற்று அதிருப்தி என்னும் தகவல். அந்த அதிருப்தியை பிரதமர் தனிப்பட்ட முறையில் கணக்கே எடுத்துக் கொள்ளமாட்டார் என பிரதமருடன் தொடர்புடைய வட்டாரங்கள் தெரிவித்தன.

ஜனாதிபதிக்கும், அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களுக்கும் இடையிலான முரண்பாடுகள் முற்றி வருகின்றன என்று தெரிவிக்கும் தென்னிலங்கை ஊடகவியலாளர்கள், இனிமேல் தொல்லை தரும் அமைச்சர்களைச் சமாளிப்பதற்காக 'அமைச்சர்களைக் கையாளும் அமைச்சர் பதவி' ஒன்றை – அதற்கான தனியான அமைச்சை – உருவாக்கி, அதற்காக ஒருவரை அமைச்சராக ஜனாதிபதி நியமிக்கவும் வேண்டும் எனவும் ஏளனத்துடன் குறிப்பிடுகின்றனர்.

சிறைச்சாலைத் துறை அமைச்சர் சிறைக்குள் அத்துமீறி நுழைந்து செய்த அராஜகத்துக்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய காலம் கடந்து மூன்று மாதங்களாகிவிட்டன. அதற்கே நடவடிக்கை எடுக்காத ஜனாதிபதி கோட்டாபய, ஏனைய அமைச்சர்கள், அமைச்சுச் செயலாளர்கள் மேற்கொள்ளும் திருகுதாளங்களுக்கு நடவடிக்கை எடுப்பார் என நம்புவது – எதிர்பார்ப்பது – சுத்த அபத்தமின்றி வேறில்லை.

– மின்னல் –

## ஹக்கீமும் மனோ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

13ஆவது திருத்தத்தை முழு அளவில் நடைமுறைப்படுத்துமாறு இலங்கையை வற்புறுத்தும்படி, தமிழர் தரப்புக்கள் அனைத்தும் ஒன்று சேர்ந்து இந்தியாவை கோருவதற்கான் ஓர் ஏற்பாட்டைச் செய்வதற்கு முயற்சி எடுக்கப்பட்டது. அதற்காக யாழ்ப்பாணத்தில் ரெலோவின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட கூட்டத்தில் இலங்கை தமிழரசுக் கட்சி பங்குபற்றவில்லை. அது குறித்து மனோ கணேசனும் ஹக்கீமும் சம்பந்தனுடன் நேற்று பேச்சுகளில் ஈடுபட்டனர்.

இக்கூட்டத் தொடரின் அடுத்த கூட்டம் கொழும்பில் நடைபெறும் போது அதில் பங்கு பெறுமாறு இருவரும் சம்பந்தனைக் கோரினர்.

நாளை மறுதினம் நாடாளுமன்றக் கூட்டத் தொடர் தொடங்குகின்றது. தொடர்ந்து வரவு – செலவுத் திட்ட சமர்ப்பிப்பும் அதை ஒட்டிய விவாதங்களும் இடம் பெற இருக்கின்றன. அவற்றுக்கிடையில் தமிழரசுக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களோடும், கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களோடும் பேச்சு நடத்தி, இவ்விடயம் குறித்து ஒரு முடிவு எடுக்கலாம் என்று சம்பந்தன் தெரிவித்திருக்கிறார் என அறிய வந்தது.

நேற்றைய சந்திப்பு ஆக்கபூர்வமான தாகவும், திருப்தி தருவதாகவும் அமைந்தது எனவும், அடுத்த சுற்றுப் பேச்சுக்களின் போது காத்திரமான முடிவு எடுக்கப்படும் எனவும் ரவூப் ஹக்கீம் நேற்றிரவு காலைக்கதிருக்குத் தெரிவித்தார்.

தமிழர் தரப்புகள் ஒற்றுமைப்பட்டுச் செயற்படுவதற்கோ அல்லது தமிழர் தரப்புகளை ஒற்றுமைப்படுத்தும் முயற்சிக்கோ தமிழ் அரசுக் கட்சி எதிரானதல்ல என்று நேற்று தம்மைச் சந்தித்த மனோ கணேசனிடமும் ஹக்கீமிடமும் குறிப்பிட்ட சம்பந்தன், உண்மையில் 13க்கு ஆதரவு தேடும் இந்த முயற்சி தெற்கில் சிங்களக் கட்சிகளை இணங்க வைப்பதற்கு மேற்கொள்ளப்பட்டிருக்கப்பட வேண்டும் எனவும் பதிலளித்துள்ளார் என அறிய வந்தது.

## போராட்டங்களால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பொதுஜன முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் வசந்த யாப்பா பண்டார எச்சரிக்கை விடுத்தார்.

பொதுஜன முன்னணியின் காரியாலயத்தில் இன்று நடைபெற்ற ஊடகவிய லாளர் சந்திப்பில் கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

பொருளாதாரத்தில் முன்னேற்ற மடைந்த நாட்டை 2019ஆம் ஆண்டு ஒப்படைத்ததைப் போன்று எதிர்த்தரப்பினர் தற்போது அரசுக்கு எதிராகக் கருத்துரைக்கின்றார்கள்.

துரதிஷ்டவசமான கொரோனா வைரஸ் தாக்கம் கடந்த இரண்டு வருட காலமாக தாக்கம் செலுத்துகின்றது. அதன் காரணமாக ஏற்றுமதி பொருளாதாரமும், சுற்றுலாத்துறை சேவை கைத்தொழிலும் முழுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

பொருளாதாரம் மற்றும் சமூகக் கட்டமைப்பில் முன்னேற்றமடைந்த நாடுகள் கொரோனா வைரஸ் தாக்கத்தால் பாதிக்கப்பட்டுள்ளதுடன், இன்று வரை அதன் தாக்கத்தை எதிர்கொள்கின்றன. இருப்பினும் இலங்கை கொரோனா வைரஸ் பரவலை வெற்றிகரமாகக் கட்டுப்படுத்தியுள்ளது.

கொரோனாத் தடுப்பூசி செலுத்துவதில் செல்வந்த நாடுகளைக் காட்டிலும் இலங்கை முன்னிலை வகிக்கின்றது. நாட்டின் மொத்த சனத்தொகையில் 80 சதவீதத்துக்கும் அதிகமான மக்கள் கொரோனாத் தடுப்பூசியின் இரண்டு டோஸ்களையும் பெற்றுக்கொண்டுள்ளனர். தற்போது முன்னிலை சேவை தரப்பினருக்கு மூன்றாம் கட்டமாக செயலூட்டி (பூஸ்டர்) தடுப்பூசிகளை வழங்குவதற்கான முதற்கட்ட நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

புதுவருட கொரோனாக் கொத்தணி தீவிரமடைவதற்குத் தொழிற்சங்கத்தினரது போராட்டமே காரணமாகக் காணப்பட்டது.

புதுவருட கொரோனா கொத்தணியில் தான் அதிக மரணங்கள் பதிவாகின. அதன் தாக்கம் இன்றும் தொடர்கின்றது. கொரோனா தாக்கம் கட்டுப்படுத்தப்பட்டுள்ள நிலையில் மக்கள் தற்போது அன்றாட நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார்கள்.

தற்போது அரசியல் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்ட போராட்டங்கள் மீண்டும் தீவிரமடைந்துள்ளன. இந்தப் போராட்டங்களால் கொரோனாத் தொற்று உச்சமடைந்தால் இன்னும் இரண்டு மாத காலத்துக்குள் நாட்டை மீண்டும் முடக்க நேரிடும். அவ்வாறு இடம்பெற்றால் நாடு மாத்திமல்ல பொதுமக்களும் பெரும் பாதிப்புக்களை எதிர்கொள்ள நேரிடும். ஆகவே, தொழிற்சங்கத்தினர் பொறுப்புடன் செயற்பட வேண்டும் – என்றார்.

## தடுப்பூசி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இடங்களுக்குள் நுழையும்போது முழுமையாகத் தடுப்பூசி பெற்றுக்கொண்டுள்ளமை உறுதி செய்வதற்கான அட்டை கட்டாயமானது என்று கனேடியத் தூதுவர் டேவிட் மெக்கின்னன் சுட்டிக்காட்டினார்.

இதன்போது சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல, ஐரோப்பிய நாடுகளில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் இந்தத் திட்டத்தை இலங்கையில் நடைமுறைப்படுத்துவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது எனக் கூறினார்.

இதனிடையே, நாட்டில் இதுவரை 28 ஆயிரத்து 520 பேருக்கு பூஸ்டர் டோஸ் தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது எனவும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

## வரும் நாள்களில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகமும் விசேட வைத்திய நிபுணருமான வைத்தியர் ஹேமந்த ஹேரத்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:–

மக்களின் நாளாந்த வாழ்க்கை, இயல்பு நிலைக்குத் திரும்பி வருகின்ற நிலையில், கொரோனாத் தொற்று பரவுவதை குறைந்த மட்டத்தில் பேணும் பொறுப்பு பொது மக்களுக்கும் சுகாதார தரப்பினருக்கும் உள்ளது.

நாளாந்தத் தொற்றாளர்களின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு பார்க்கும்போது, சில அதிகரிப்புகள் காணப்படுகின்றன. கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்ட காலப்பகுதியில் நாளாந்தத் தொற்றாளர்களின் எண்ணிக்கை குறைவடைந்திருந்தது.

பின்னர் நாடு திறக்கப்பட்டதும் அந்த நிலைமை மாறியுள்ளது. அந்த நிலைமை தொடருமானால் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்.

சுகாதார வழிமுறைகள் பேணப்படாவிடின் இந்த நிலைமை மேலும் அதிகரிக்கும் அபாயம் காணப்படுகின்றது.

எமக்கு சில நிழற்படங்கள் கிடைத்துள்ளன. அதாவது வைத்தியர்கள் உள்ளிட்ட சுகாதார ஊழியர்கள் சுற்றுலாப் பயணங்களை மேற்கொண்டு, முகக் கசவமின்றி புகைப்படம் பிடித்துள்ள படங்கள் எமக்குக் கிடைத்துள்ளன. இது மிகவும் வேதனைக்குரிய விடயம்.

சுகாதார ஊழியர்கள் என்ற வகையில் ஏனையோருக்கு முன்னுதாரணமாகச் செயற்பட வேண்டும். அனைத்து நேரங்களிலும் முகக் கவசங்களை அணிந்து, சமூக இடைவெளியைப் பேணுவது சுகாதாரப் பிரிவினருக்கு மாத்திரமல்ல, அனைவருக்கும் பொருந்தும்.

எனவே, அனைவரும் ஒன்றிணைந்து கொரோனாத் தொற்றை ஒழிக்கும் செயற்பாடுகளை முன்னெடுக்காவிட்டால், எதிர்வரும் நாள்களில் மேலும் பல சவால்களை எதிர்கொள்ள நேரிடும் – என்றார்.






# உலகம் முழுதும் வாழும் தமிழருக்கு பெரும் வரப்பிரசாதம் காலைக்கதிர்

## மெச்சி வாழ்த்துகிறார் யாழ் ஆயர்



காலைக்கதிர் பத்திரிகை 2016 ஆம் ஆண்டு வெளிவரத் தொடங்கி 2021 ஆம் ஆண்டு 05 ஆண்டுகள் நிறைவாகின்ற மகிழ்வான வேளையில் இப்பணியை ஆற்றும் மூத்த ஊடகவியலாளர் திருவாளர் நடேசபிள்ளை வித்தியாதரன் அவர்களையும் துணை நிற்கும் பத்திரிகைக் குடும்பத்தையும் பாராட்டி வாழ்த்த விரும்புகிறோம்.

இரவும் பகலும் பசி நோக்காது, கண் துஞ்சாது, பெரும் வருமானத்தை எதிர்பாராது, தமிழ் மக்களின் பொது நன்மை கருதி ஆற்றப்படும் இப்பணி என்றும் தொடர பாராட்டப்பட வேண்டும்.

யாழ்ப்பாணக் குடாநாட்டிலிருந்து பல தினசரிப் பத்திரிகைகள் வெளிவரும் நிலையில் அவற்றோடு போட்டி போட்டு தனக்கென ஒரு தனி இடத்தைப் பெற்று காலைக்கதிர் பத்திரிகை வீறு நடைபோடுகிறது என்பது மறுக்கப்பட முடியாத ஓர் உண்மையாகும்.

இலங்கையில் தினசரிப் பத்திரிகை ஒன்று தனது அன்றாடக் காலைப் பத்திரிகைப் பதிப்புடன் அதன் காலை இணையப் பதிப்பையும் அத்துடன் மாலை இணையப் பதிப்பையும் வெளியிடுகின்றது என்றால் அது காலைக்கதிர் பத்திரிகைதான் என்றால் மிகையாகாது.

காலைக்கதிர் பத்திரிகையின் காலை மற்றும் மாலை இணையப் பதிப்புக்களை இலங்கை வாழ் தமிழ் மக்களும் இன்னும் சிறப்பாக வெளிநாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்களும் மின் அஞ்சல் மற்றும் சமூக வலைத்தளங்கள் மூலம் பெற்றுப் படித்துப் பயனடைகின்றனர். பாராட்டுகின்றனர்.

உண்மையில் புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழும் தமிழ் மக்களுக்கு காலைக்கதிர் பத்திரிகையின் காலை மற்றும் மாலை இணையப் பதிப்புக்கள் ஒரு பெரிய வரப்பிரசாதமாகும். எந்தக் கட்டணமும் இன்னும் இன்றி மின் அஞ்சல் மற்றும் சமூக வலைத்தளங்கள் மூலம் வீட்டிலிருந்தவாறு காலைக்கதிர் பத்திரிகையின் காலை மற்றும் மாலை இணையப் பதிப்புக்களைப் பெற்றுப் பயன் பெறுகின்றனர்.

மாலைப்பதிப்பு பத்திரிகைக்குப் பழக்கப்படாத வடபகுதி மக்கள மத்தியில் மாலைப் பதிப்பு ஒன்றை முதலில் அச்சில் வெளியிட்டு மக்களின் மனதை நாடி பிடித்துப் பார்த்த பின்னர் அதனை நேரலை மூலம் வெளியிடுவது ஒரு சிறந்த யுக்தியாகும்.

தமிழ்ப் பத்திரிகை உலகில் நேரலை மூலம் பத்திரிகை ஒன்றை வெளியிடுவதன் வழி ஒரு புதிய சகாப்தம் ஒன்றைத் தொட்ட காலைக்கதிர் பத்திரிகை என்றும் பாராட்டப்பட வேண்டிய பத்திரிகையாகும்.

காலைக்கதிர் பத்திரிகை ஞாயிறு தினங்களில் ஆங்கிலப் பக்கங்களையும் இணைத்து வளரும் இளைய சமுதாயத்தினருக்குத் துணை புரிய முயல்வது சிறப்பானது.

மேலும் ஞாயிறு தினங்களில் காலைக்கதிர் கிறிஸ்தவ செய்தி இதழ் ஒன்றை வெளியிடுவது சமயங்களுக்கிடையிலான புரிந்துணர்வையும் நல்லெண்ணத்தை வளர்க்கும் ஒரு நல்ல செயலாகும். பத்திரிகை தொடங்கிய காலம் முதல் வெளியிடப்படும் இந்த காலைக்கதிர் கிறிஸ்தவ செய்தி இதழ்ப் பணிக்காக கத்தோலிக்க மக்கள் பெயரால் நன்றி தெரிவிக்க விரும்புகிறோம்.

காலைக்கதிர் பத்திரிகையின் இப்பணி மேலும் பல வழிகளில் வளர வாழ்த்துகிறேன்.

**மேதகு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை**
**(யாழ் ஆயர்)**

## காலைக்கதிர் கிறிஸ்தவ செய்தி பக்கத்தை இந்து சமய அன்பர்களும் படிக்கின்றார்கள்!

### கலாநிதி ரூபன் மரியாம்பிள்ளை அடிகள் பெருமிதம்

'காலைக்கதிர்' பத்திரிகை ஆறாவது ஆண்டில் கால் பதித்து மகிழ்கிறது என்னும் போது காலைக்கதிர் பத்திரிகையின் கிறிஸ்தவ செய்தி இதழும் ஆறு ஆண்டுகளை நிறைவு செய்து மகிழ்கிறது என்ற மகிழ்வோடு காலைக்கதிர் பத்திரிகை ஆசிரியர் நடேசபிள்ளை வித்தியாதரன் அவர்களுக்கும் காலைக்கதிர் குடும்பத்திற்கும் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்வடைகிறேன்.

காலைக்கதிர் பத்திரிகை 2016ஆம் ஆண்டு முதல் காலைக்கதிர் கிறிஸ்தவ செய்தி இதழ் பக்கம் ஒன்றை ஒவ்வொரு ஞாயிறு தினத்திலும் ஒரு ஞாயிறு தவறாமல் வெளியிட்டு கத்தோலிக்க மக்களுக்கு அறிவையும் மகிழ்வையும் தருவது பற்றி கத்தோலிக்க மக்கள் மகிழ்கிறார்கள். நன்றியுணர்வுடன் இருக்கிறார்கள் என்பது மறுக்கப்பட முடியாத உண்மையாகும். இந்த அரிய பணிக்காக இவ்வேளையில் காலைக்கதிர் கிறிஸ்தவ செய்தி இதழ் ஆசிரியர் என்கின்ற வகையில் அதன் அன்பு நெஞ்சங்கள் சார்பாக அன்பான நன்றிகளைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

எமக்கு வரும் மடல்களில் இருந்து கத்தோலிக்க மக்கள் மட்டுமல்ல, பல இந்து சமய அன்பர்களும் இப்பக்கத்தைப் படிக்கிறார்கள், பயனடைகிறார்கள் என்பதை அறியக்கூடியதாக இருக்கிறது.

காலைக்கதிர் பத்திரிகையின் கிறிஸ்தவ செய்தி இதழ் பக்கம் போல் தமது இந்து சமயத்திற்கும் ஒரு பக்கம் வெளியிடப்பட்டால் சிறப்பாக இருக்கும் என்று தெரிவித்த அன்பர்களுக்கு இவ்வாறான ஒரு பக்கத்தை யாராவது தயார் செய்து கொடுத்தால் அதனைப் பிரசுரிக்க காலைக்கதிர் பத்திரிகை நிர்வாகம் ஆயத்தமாக உள்ளது, முன்னர் இது போன்ற முயற்சி மேற்கொள்ளப்பட்டது, ஆனால் அது முழு வெற்றியளிக்கவில்லை என்றும் தெரிவித்துள்ளேன்.

இன்றைய காலத்தின் முக்கிய தேவையான சமயங்களுக்கிடையிலான நல்லெண்ணத்தையும் புரிந்துணர்வையும் அறிவையும் வளர்க்கும் இப்பணியை காலைக்கதிர் பத்திரிகை தொடர்ந்து சிறப்பாக ஆற்ற வேண்டுமென அன்பு வேண்டுகோள் விடுக்கிறேன்.

காலைக்கதிர் பத்திரிகையின் பணி தொடர இறையாசீர் மிக்க வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறேன்.

**கலாநிதி ரூபன் மரியாம்பிள்ளை அடிகள்**
(ஊடக வருகை விரிவுரையாளர் - இலங்கை திறந்த பல்கலைக்கழகம், ஓய்வு நிலை ஊடக வருகை விரிவுரையாளர் - யாழ் பல்கலைக்கழகம்,
இயக்குநர் பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர்)

## நீண்டநாள் நிலைக்கவென நெஞ்சார வாழ்த்துகிறேன்!

காலையும் வருகிறாய் மாலையும் வருகிறாய்
கருத்துகள் தேடியே கொடுத்துமே மகிழ்கிறாய்
ஆவலைத் தூண்டியே அனைத்தையும் அளிக்கிறாய்
ஆசியான் அளிக்கிறேன் ஆண்டுபல காண்பாய்

ஈழத்தின் ஆதவனாய் எழுந்துமே வருகிறாய்
தமிழ்வாழு மிடமெல்லாநீ தோழமையாய் ஆகுகிறாய்
ஆழநிறை ஆக்கமெலாம் அள்ளியே தருகிறாய்
ஆண்டுபல காண்கவென அகமகிழ வாழ்த்துகிறேன்

காலைக் கதிராகி கசடுகளைக் களைகின்றாய்
கற்றவரும் மற்றவரும் விரும்புவதைப் பகர்கின்றாய்
தோலை யுரிக்கின்ற சொற்சிலம்பும் ஆடுகிறாய்
தொய்வின்றி தொடர்ந்துவர மெய்யாக வாழ்த்துகிறேன்

வித்தியா தரனின் முத்திரையைக் காட்டுகிறாய்
சத்தியம் தார்மீகம் வித்தியிடம் நிறைந்திருக்கு
காய்தல் உவத்தலின்றி காலைக்கதிர் மலர்கிறது
கனியாகி பலனீய களிப்புடனே வாழ்த்துகிறேன்

ஆண்டாறு அகவையிலே அடியெடுத்து வைக்கும்
அருமைமிகு காலைக்கதிர் ஆண்டுபல காண்க
தூண்டாமணி விளக்காய் துலங்கிவிடும் காலைக்கதிர்
நீண்டநாள் நிலைக்கவென நெஞ்சார வாழ்த்துகிறேன்

**- மகாதேவஐயர் ஜெயராமசர்மா -**
**(மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர், மெல்பேண், ஆஸ்திரேலியா)**




# புதிய பரிணாமத்தை பதித்துள்ள நாளிதழ்

### ஈசான சிவ சக்திகிரீவன்
### (தலைவர், இந்து சமயப் பேரவை, யாழ்ப்பாணம்)

நாளாந்தம் காலையும் மாலையும் செய்திகளை உடனுக்குடன் மக்களுக்குத் தரும் 'காலைக்கதிர்' பத்திரிகையின் ஐந்தாவது ஆண்டு நிறைவையொட்டி அந்நிறுவனத்துக்கு ஆசி வழங்குவதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

பத்திரிகையுலகில் புதிய பரிணாமத்தைப் பதித்துள்ள காலைக்கதிரின் அனைத்து அம்சங்களும் மக்கள் மனதைக் கவர்ந்திழுப்பனவாகவேயுள்ளன. ஆசிரியர் தலையங்கம், இனிஇது இரகசியமல்ல போன்றவை இப்பத்திரிகையின் ஆசிரியர் அனைத்துவிடயங்களிலும் ஆழ்ந்த புலமை பெற்ற முதுபெரும் எழுத்தாளர்திரு ந.வித்தியாதரன் என்பதைத் தெளிவாக்கிறது.

இவரே இன்றைய பத்திரிகை உலகின் ஜாம்பவான், தாதா என்றால் மிகையில்லை. இவரது எழுத்து நேர்மையற்றவரை நேர்மையாளனாக்கும், நேர்மையாளனை ஞானியாக்கும், கல்லாதவரைக் கற்றவராக்கும், கற்றவரைப் பண்டிதராக்கும்.

இத்தகைய ஆற்றலுக்கு தினபதி ஆசிரியர் அமரர் எஸ்.டி.சிவநாயகம் போன்றவர்களோடு இவருக்கேற்பட்ட தொடர்பும் ஒரு காரணமாகலாம்.

இதற்கு மேலாக இவர் சிறந்த விவேகி என்பது என் எண்ணம். சட்டநுணுக்கங்களைச் சட்டம் படிக்கும் காலத்தில் நன்கு தேர்ந்ததால் இவர் ஆளுமை இன்னுமொருபடி மேலாகிறது. இத்தகைய நுட்பங்களை இன்று பத்திரிகைத் துறையில் ஈடுபடுவோர் இவரிடம் கற்பது அவசியமாகிறது. சகல பத்திரிகைகளும் வளரவேண்டும் எனும் பெரிய மனம் இவரது துணிவான எழுத்திற்கு வலுச்சேர்க்கிறது. யுத்தகாலத்தில் சகல தரப்பினரையும் சமமாகக் கையாண்ட அவரது சாணக்கியம் தனித்துவமானது. நன்றியுணர்வு கொண்ட இவரது தமிழ், ஆங்கிலப் புலமை இவரை மேதாவிலாசமுள்ளவராக்கி விட்டது. இவ்வுண்மையை காலைக்கதிர் ஐந்தாவது ஆண்டு நிறைவுக்கு ஆசிச்செய்தி வழங்கும் போது குறிப்பிடுவது சாலப் பொருத்தமாகிறது.

இணையத்தளம் மூலம் உலகனைத்தும் பரவும் இப்பத்திரிகை தமிழ் மொழிபோல் இளமையோடு என்றும் திகழ வேண்டுமென எமது வழிபடு தெய்வமான சிவகாமசுந்தரி சமேத நடராஜப் பெருமானைப் பிரார்த்தித்து நல்லாசிகளைத் தெரிவிக்கின்றேன்.

# நமது பார்வை

**உண்மை - நேர்மை - பக்கம் சாராமை**

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## ஆறாம் ஆண்டில் 'காலைக்கதிர்'

உங்கள் 'காலைக்கதிர்' இன்று ஐந்தாவது அகவையைப் பூர்த்தி செய்து, ஆறாவது ஆண்டில் காலடி எடுத்து வைக்கின்றது.

ஈழத் தமிழ் ஊடகத்துறையில் அதன் வருகையும், பங்கு பணியும், ஆற்றிய காத்திரமான பங்களிப்பும், காட்டிய பாதையும் கவனிப்புக்குரியவை.

காலைக்கதிரின் கடந்த ஐந்து ஆண்டு கால முகிழ்வை நெருங்கி நோக்கும் வாசகர்கள் ஒரு விடயத்தை நன்கு அவதானிக்க முடியும். அது, இலாபநோக்கு, வருமானம் ஈட்டும் கருத்து, ஏதேனும் ஒன்றை சம்பாதிக்கும் இலக்கு எதனையும் உள்நோக்காகக் கொண்டு செயற்படுகின்ற ஊடகமல்ல என்பதுதான்; ஆனால், மாறாக, ஈழத் தமிழ் மக்கள் மனதில் நேரிய, சீரிய உணர்வுகளையும், எண்ணங்களையும், கருத்தியலையும், அறிவையும் வளர்க்கும் கருத்துருவாக்கியாக அது தன்னை மாற்றிக் கொண்டு முகிழ்ந்து வருகின்றது என்பதும்தான்.

அச்சு ஊடகமாக ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் பிறப்பாக்கம் எடுத்தது உங்கள் காலைக்கதிர். அதே கால கட்டத்தில் – இலாப நோக்கத்தை கிஞ்சித்தும் எதிர்பாராமல் – உலகம் முழுவதும் பரந்து வாழும் நமது தமிழ் மக்களை எட்டுவதற்காக, வளர்ந்து வந்த தொழில்நுட்பத்தை உரிய முறையில் பயன்படுத்திக் கொண்டு, தன்னை மின்னியல் ஊடகமாகவும் முழுமையாக அது வடிவமைத்தும் கொண்டது. இணைய நாளிதழாக தன்னை மாற்றிக் கொண்ட காலம் முதல், 'வட்ஸ் அப்', 'வைபர்', மின்னஞ்சல், முகநூல் போன்றவை வழியாகவும் விடிகாலையிலும் மாலையிலும் தினசரி இரண்டு வெளியீடுகளாக உலகம் முழுவதும் இருக்கும் வாசகர்களை தவறாது தேடி, நாடி வருகின்றது காலைக்கதிர்.

மிக வேகமாக மாறி வரும் தொழில்நுட்ப உலகில் வாசகர்களை நேரத்துடனேயே தேடிச் செல்லும் இந்த உத்தியை காலைக்கதிர் அறிமுகப்படுத்தியபோது, அதனை நகைப்பிடமாக்கிய – ஏளனத்துடன் பார்த்த – பல பிற ஊடகங்கள் இப்போது அத்திசையை நோக்கி மெல்ல நகர முற்பட்டிருக்கின்றமை காலத்தின் கட்டாயம். இணைய நாளிதழ் மூலம் வாசகர்களை துரிதமாக எட்டும் புதிய தொழில்நுட்பப் பாய்ச்சலை பத்திரிகைகள் கைக்கொள்வது தவிர்க்க முடியாத நிர்ப்பந்தமாக எதிர்காலத்தில் அமையலாம். தமிழ் ஊடகப் பரப்பில் அதற்கு முதல்முதலில் கட்டியம் கூறியது உங்கள் நாளிதழான காலைக்கதிர்தான்.

காலைக்கதிரின் ஆண்டு நிறைவை ஒட்டி நாம் சுட்டிக் காட்ட வேண்டிய இன்னொரு விடயமும் உண்டு.


ஆரவார விழாக்கள், கொண்டாட்டங்கள் இல்லாமல் – எங்களை நாங்களே வாழ்த்தும் பந்தாச் செய்திகளை நாமே தேடி வாரி, அள்ளிக் கொட்டி, எம்மை நாமே அதிகம் பிரபலாபித்துக் கொள்ளாமல் – சிறப்பிதழ் என்ற பெயரில் எம்மை வேறு எவரும் வாழ்த்துவதற்காக எவரிடமும் விளம்பரக் கட்டணம் அறவிடும் 'ஊடக வர்த்தகம்' பண்ணாமல் – எமக்குக் கட்டணம் செலுத்தி, எம்மை வாழ்த்துமாறு விளம்பரதாரரை நிர்ப்பந்திக்காமல் – இந்த ஆண்டு நிறைவையும் அடக்கமாகவும், பொறுப்புணர்வோடும், நம் பேனாமுனைக்கு நீதியுடன் மதிப்பளித்தும் அடக்கத்துடனும் திருப்தியுடனும் கொண்டாடுகின்றோம்.

நமது பத்திரிகையைப் பின்னணியில் இயக்கும் 'பசுமை ஊடக இல்லம்' பத்திரிகைத் தாள்களை வீணாக்குவதன் மூலம் தாவர வர்க்கங்களையும் உலக இயக்க சமநிலையையும் குழப்பும் தரம்கெட்ட அழிவுச் செயலை அதிகம் விரும்பவில்லை. அதனால்தான் பத்திரிகைத் தாள்களை அதிகம் பயன்படுத்தாமலேயே வாசகர்களை எட்டும் புதிய தொழில்நுட்ப தந்திரோபாயத்தை வசமாகப் பயன்படுத்தும் ஓர் உத்தியில் நெருக்கடிகளுக்கு மத்தியிலும் முழுமூச்சில் ஈடுபட்டுள்ளது நமது நிறுவனம்.

வாசகர்களாகிய உங்களதும் மற்றும் நமது சக ஊழியர்கள், விளம்பரதாரர்கள், ஆக்க கர்த்தாக்கள் ஆகியோரினதும் ஒத்துழைப்புடன் அந்த முயற்சியில் முழுமையாக வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கையில் எங்கள் பயணம் தொடர்கின்றது.

## நிறைவாக, விவேகமாக, அரசியல் சாயமற்று ஐந்து ஆண்டுகளைக் கடக்கும் காலைக்கதிர்

### நீதியரசர் விக்னேஸ்வரன் மனம் திறந்து வாழ்த்து



'காலைக்கதிர்' நாளிதழின் ஐந்தாம் ஆண்டு நிறைவையொட்டி யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் வாழ்த்துச் செய்தி ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

காலைக்கதிர் நாளிதழின் முன்னோட்டமாக முதல் நாள் மாலையில் – 2016 நவம்பர் 05 ஆம் திகதி – பிரசுரமான 'விடியல் வீச்சு' இதழை அப்போதைய எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தனுடன் இணைந்து வெளியிட்டு வைத்து, காலைகதிரின் உயர்வுக்கு ஆசீர்வாதம் அளித்தவர் நீதியரசர் விக்னேஸ்வரன் என்பது குறிப்பிடத்தக்கது. அவர் தமது வாழ்த்தில் தெரிவித்திருப்பவை வருமாறு:-

வடபகுதியில் வெளிவருகின்ற தமிழ் ஊடகங்களில்தனக்கென ஒருதனியான பாணியை அமைத்துக்கொண்டு தினமும் அரசியல், சமூக, கல்வி மற்றும் பொது நிகழ்வுகளை மக்களுக்கு அச்சு ஊடக வழியே வழங்கி வந்த காலைக்கதிர் பத்திரிகை, நாட்டில் ஏற்பட்ட கொரோனா போன்ற வலுவான தொற்று அலைகள் மற்றும் காகிதாதிகளின் விலையேற்றம் இன்னும் பிற காரணிகளால் அச்சு ஊடகமாக மட்டும் தொடர்ந்து வெளிவர முடியாத நிலையில், நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி ஓர் இலத்திரனியல் பத்திரிகையாக இணைய வழி ஊடகமாக வலைத்தளத்திலும் மற்றும் வட்ஸ்அப், வைபர், மின்னஞ்சல் மற்றும் முகநூல் போன்ற வழிகளிலும் தற்போது பவனி வருகின்றது. மீண்டும் இப் பத்திரிகை அச்சு வடிவில் சில நாள்களில் வெளிவர இருப்பதாக தற்போதைய தகவல்கள் மூலம் அறிந்து கொண்டேன்.

விடியற் காலையிலேயே பொழுது புலர்வதற்கு முன்னர் ஆயிரக்கணக்கான வாசகர்கள் அன்றைய செய்திகளை அறிந்து கொள்ளக் கூடிய வகையில் காலைக்கதிர் பிரசுரமாகி வருவது பாராட்டுக்குரியது. பல சிரேஷ்ட ஊடகவியலாளர்களின் பங்களிப்புடன் திரு.ந.வித்தியாதரன் அவர்களின் முயற்சி பயனளித்து வந்துள்ளது. காலைக்கதிர் நாளிதழ் பொழுது புலர்வதற்கு முன்பதாகவே இணைய வழி ஊடாக பிரசுரமாகிவிடுவதால் என்னுடன் சேர்த்து இன்னும் பல வாசகர்கள் அன்றைய நாளுக்கான செய்திகளை முழுமையாக நேரத்துடனேயே படித்து விடுவார்கள். நானும் அத்தருணத்தில் விழிப்பாக இருப்பதால் எனது வேலைகளை இடை நிறுத்தி விட்டு இப் பத்திரிகையை முழுமையாக வாசித்து விடுவேன்.

காலைக்கதிர் பத்திரிகை அன்றாடச் செய்திகளை தமக்கே உரிய பாணியில் உண்மையாகவும் நேர்மையாகவும் வெளியிடுகின்ற போதும் சில வேளைகளில் அவர்களின் அரசியல் விமர்சனங்கள் விமர்சிப்பவரை கடுமையான மன உளைச்சலுக்கு ஆளாக்கி விடுகின்றன. சற்று நகரீகமற்ற முறையோ அவர்களின் விமர்சனங்கள் என்று சில நேரங்களில் எண்ணத் தோன்றும். ஆனாலும் அடுத்த தினம் விமர்சிக்கப்பட்டவர் பற்றி, அவரின் சிறப்பான செயற்பாடுகள் பற்றி புகழாரம் சூட்டுகின்ற போது மலை உச்சியளவிற்கு புகழாரம் சூட்டி அவர்களின் நல்ல செயற்பாட்டை வாழ்த்தியிருப்பார்கள்.

இப்பத்திரிகையின் மற்றொரு நல்லதொரு செயற்பாடாக மத நல்லிணக்கத்திற்கும் இனத்தின் விடியலுக்கும் உறுதுணையாக அவர்கள் இருப்பது இதன் தனிச் சிறப்பாகும்.

தமிழ் அரசியல் கட்சிகளுக்கிடையே ஏற்படக் கூடிய முரண்பாடுகளையும் மற்றும் தவறான புரிந்துணர்வுகளையும் நீக்கும் முகமாக கொள்கை வழி ஐக்கியத்தை ஏற்படுத்துவதற்கு சரியான சந்தர்ப்பத்தை எதிர்பார்த்து தமது முழுமையான பங்களிப்புக்களை வழங்கி அவர்களை இணக்கப்பாட்டிற்குக் கொண்டு வருவதற்கு இப் பத்திரிகை எழுத்தாளர்கள் மேற்கொள்ளுகின்ற முயற்சிகள் பற்றி நாம் பல சந்தர்ப்பங்களில் அக மகிழ்ந்து இருக்கின்றோம்.

காலைக்கதிர் பத்திரிகை தமது ஐந்து ஆண்டுகளை நிறைவாகவும், விவேகத்துடனும் அரசியல் சாயமற்றும் பூர்த்தி செய்து தனது ஆறாவது ஆண்டில் காலடி எடுத்து வைக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் காலைக்கதிர் பத்திரிகையின் பிரதம ஆசிரியர், சிரேஷ்ட ஊடகவியலாளர்கள், நிர்வாகிகள், ஏனைய ஊடகவியலாளர்கள் மற்றும் அனைத்து ஊழியர்களையும் மனமாற வாழ்த்துவதுடன் திரு.ந.வித்தியாதரன் அவர்களை மனமார, உளமார வாழ்த்தி, இவர்களின் சிறந்த பணி தொடர இறைவனைப் பிரார்த்தித்து எனது வாழ்த்துச் செய்தியை நிறைவு செய்கின்றேன். – என்று உள்ளது.

## செல்பி எடுப்பதற்குச் சென்ற இளைஞரை மோதியது ரயில்!

வவுனியா கல்லாற்றுப் பாலத்தில் செல்பி எடுக்க முற்பட்ட இளைஞரொருவர் ரயிலில் மோதி உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவம் நேற்று (வெள்ளிக்கிழமை) காலை 8.30 மணியளவில் மதவாச்சி மன்னார் வீதி கல்லாற்றுப்பாலத்தில் இடம்பெற்றது.

மன்னார் முருங்கன் பகுதியில் இருந்து செட்டிகுளம் நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்ற இரு இளைஞர்கள், செட்டிகுளம் கல்லாறுப் பாலத்தில் ஏறி தங்களது கையடக்கத் தொலைபேசியில் செல்பி எடுக்க முற் பட்டுள்ளனர். இதன்போது மன்னார் பியர் பகுதியில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்று கொண்டிருந்த ரயிலில் மோதி விபத்திற்குள்ளாகியுள்ளனர்.

இந்த விபத்தில் இளைஞர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளமையுடன், ஏனையவர் பாலத்தின் கீழே குதித்து உயிர் பிழைத்துள்ளார். சம்பவத்தில் முருங்கன் பரியாரி கண்டல் பகுதியை சேர்ந்த பிரான்ஸிஸ் கண்ணா (வயது 19) என்ற நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். இந்த விபத்து தொடர்பாகப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## வடமாகாண மரநடுகை மாதம்
## கார்த்திகை - 2021



'உலகம் நாளை துண்டுகளாக உடைந்து அழியப் போவதாக நான் அறிந்தாலும் இன்றும் ஒரு மரத்தை நடுவேன்'

– மார்ட்டின் லூதர்
(ஜேர்மனிய கத்தோலிக்க மதகுரு)

# சமூகப் பிரச்சினைகளை உலகறியச் செய்து உன்னத பணியாற்றும் காலைக்கதிர் ஊடகம்

## பணியைப் பாராட்டுகின்றார் நல்லை குருமகா சந்நிதானம்



காலைக்கதிர் பத்திரிகையின் 5 ஆவது ஆண்டுப் பூர்த்தி குறித்து மிகவும் ஆனந்தமடைகின்றோம்.

எங்கள் சமூகத்தின் பிரச்சினைகளை உலகம் அறியச்செய்வதில் ஊடகங்கள் முக்கியத்துவம் வகிக்கின்றன.

காலைக்கதிர் இன்று எமது மக்களுக்குச் செய்து வரும் சேவை மகத்தானது. பத்திரிகைகள் உண்மையை எழுதவேண்டும். ஒரு செய்தியை எழுதமுன்பு அந்தச் செய்தியை நன்கு ஆராய்ந்து எழுதவேண்டும்.

காலைக்கதிர் ஆசிரியர் ஊடகத்துறையில் நீண்ட அனுபவம் மிக்கவர். அதனால் ஐந்து ஆண்டுகளில் இந்தப் பத்திரிகை துரித வளர்ச்சி அடைந்துள்ளது. சமய விடயங்களுக்குக் காலைக்கதிர் முக்கியத்துவம் கொடுத்து வருகின்றது.

மக்களின் பொறுப்புக்களை உணரவைத்து, மக்களை நல்ல பாதையால் அழைத்துச. செல்லவேண்டிய கடப்பாடு ஊடகங்களுக்கு உண்டு. காலைக்கதிர் தனது பணியை மேலும் மேலும் மக்களுக்கு உகந்தமுறையில் ஆற்றவேண்டும் என வேண்டுகின்றோம்.

இந்தப் பத்திரிகையின் வரவுக்காக அயராது உழைக்கும் அனைவருக்கும் எமது நல்லாசிகள் என்றும் உரித்தாகுக!

'என்றும் வேண்டும் இன்ப அன்பு'

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்
இரண்டாவது குருமகாசந்நிதானம்,
நல்லை ஆதீனம்.




# உண்மை – நேர்மை – பக்கம் சாராமை எனும் உயர்நெறியில் பயணம் தொடர்க!

## திருமலை ஆயர் வாழ்த்தும் ஆசியும்

*தனது பத்திரிகைப் பணியில் 5 வருடங்களை நிறைவு செய்யும் காலைக் கதிர் குடும்பத்திற்கு எனது மனம் நிறைந்த வாழ்த்துக்கள். பல உள் நாட்டு, வெளிநாட்டு செய்திகள், கட்டுரைகள், விளம்பரங்கள் மற்றும் பல தரமான பயனுள்ள விடயங்களைத் தாங்கிப் பயணிக்கின்றது காலைக்கதிர்.*

*மேலும் பிரதி ஞாயிறு வெளிவரும் காலைக் கதிர் வாசகர்களின் தேவை, ஆர்வம் அறிந்து திருமண சேவை, எழில் கதிர், விருந்துக்கதிர், மருத்துவக்கதிர், சிறுவர்கதிர், கலைக்கதிர், விவசாயி, கல்விக்கதிர், சிறுகதை, கட்டுரை, நமது பார்வை, கிறிஸ்தவ செய்தி இதழ் எனப் பலதரப்பட்ட மக்களையும் கவரும் வண்ணம் காலைக் கதிர் எம் மத்தியில் வலம்வருவது பாராட்டுக்குரியதே. 'உண்மை, நேர்மை, பக்கம் சாராமை' என்பதைத் தன் தாரக மந்திர மாகக் கொண்டு வெளிவரும் காலைக்கதிர் பத்திரிகையின் ஆசிரியர், பணியாளர்கள், ஆக்கங்களைக் கொடுப் போர் ஆகிய அனைவருக்கும் எனது வாழ்த்துக்களும் பாராட்டுக்களும்.*

*காலைக்கதிர் தொடர்ந்து சிறப்பாகப் பயணிக்க வேண்டும், மேலும் பல ஆக்கங்களைத் தாங்கி வர வேண்டுமென வாழ்த்தி முடிக்கின்றேன்.*

பேரருட்திரு கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல்
மறைமாவட்ட ஆயர்
திருகோணமலை

# கடல் கடந்து - கண்டம் கடந்து வலம் வருகின்றது காலைக்கதிர்!

## ஆசி கூறுகின்றார் ஆறு திருமுகன்

காலைக்கதிர் தற்போது கடல் கடந்து - கண்டம் கடந்து - மக்களிடம் உலாவத் தொடங்கியுள்ளது. நீண்ட ஊடகத்துறை அனுபவமுடைய நண்பர் ந.வித்தியாதரன் தனது பத்திரிகை அனுபவத்தைப் பயன்படுத்தி காலைக்கதிரின் வல்லமையை வளர்த்து வருகின்றார்.

காலையிலும் மாலையிலும் கடுகதியாய் காலைக்கதிர் இயங்குகின்றது. ஐந்து ஆண்டுகளில் தனக்கெனத் தனியிடம் பிடித்த காலைக்கதிர் தொடர்ந்தும் மேலும் பிரகாசிக்கவேண்டுமென இதயபூர்வமாக வாழ்த்துகின்றேன்.

காலைக்கதிர் போன்ற பத்திரிகைகள் தமிழரின் ஒற்றுமைக்கும் தங்களாலான பணிகளைச் செய்யவேண்டும். இன்று தமிழர்கள் வாழ்வில் ஒற்றுமையின்மை தொடர்ந்து கொண்டிருக்கின்றது. பத்திரிகைகள் வெறும் செய்திகளை மட்டும் வழங்காது மக்களைக் காக்கின்ற கவசமாகச் செயற்படவேண்டும்.

இன்று எம்மத்தியில் இலத்திரனியல் ஊடகங்கள் பல்கிப்பெருகி விட்டன. காலைக்கதிர் தனது பணியை மேலும் மேலும் விஸ்தரித்து, ஈழத்து இலக்கிய வளர்ச்சிக்குத் தனது பங்களிப்பைச் செலுத்தவேண்டும். ஈழத்தில் நல்ல படைப்பாளிகளுக்குக் களம் அமைத்துக் கொடுக்க வேண்டும். சமீப காலமாக எம்மத்தியில் இலக்கிய ஆர்வலர்கள் அருகிக்கொண்டிருக்கின்றமை கவலையளிக்கின்றது. இந்த நிலையை



மாற்றுவதற்குப் பத்திரிகையாளர்களின் பங்கு மகத்தானது.

ஆறு ஆண்டுகளில் சமூகத்தைத் தன்பக்கம் ஈர்த்துவரும் காலைக்கதிர், மேலும் மேலும் சிறந்த பணியை ஆற்றவேண்டும் என்று வாழ்த்துகின்றேன்.

பிரதம ஆசிரியர், நிர்வாக இயக்குநர், ஆசிரியர் குழுவினர், செய்தியாளர்கள் மற்றும் பணியாளர்கள் அனைவருக்கும் நல்லாசி வேண்டுகின்றேன்.

கலாநிதி ஆறு.திருமுருகன்
தலைவர்,
தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானம்
தலைவர்,
சிவபூமி அறக்கட்டளை


காலைக்கதிர்
Kalaikkathir
இரவு நேரப் பயணத் தடை நீக்கம்!
அரசை விமர்சிப்பதை உடனே நிறுத்துங்கள்

# யாழ் போதனா வைத்தியசாலை மேம்பாடு குறித்து டக்ளஸுடன் பணிப்பாளர் சத்தியமூர்த்தி ஆராய்வு



யாழ். போதனா வைத்தியசாலையில் நிலவும் குறைபாடுகள் தொடர்பாகவும் அவற்றை நிவர்த்தி செய்வதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாகவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்து யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி சத்தியமூர்த்தி மற்றும் வைத்திய கலாநிதி அரவிந்தன் ஆகியோர் கலந்துரையாடினர்.

மேற்படி சந்திப்பு நேற்றுக் காலை நடைபெற்றது. இதன்போது வைத்தியசாலையில் காணப்படும் ஆளணி மற்றும் கட்டுமான தேவைப்பாடுகள் தொடர்பிலும் அவற்றை நிவர்த்தி செய்ய வேண்டியதன் அவசியம் தொடர்பிலும் வைத்தியர்கள் அமைச்சரிடம் எடுத்துரைத்திருந்தனர்.

இந்த விடயங்களை அவதானத்திற் கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, துறைசார் அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டுசென்று அவற்றுக்குத் தீர்வு கண்டுதருவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்கிறேன் எனத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

Jaffna College Institute of Technology
Calls for the following courses

Computer Certificate Courses ( 3 – 4 months Part time)

- Certificate in MS OFFICE – (MS Word, Excel, Access & PowerPoint)
- Certificate in Graphic Designer – (PageMaker,PhotoShop & CorelDraw)
- Computer Hardware Technician
- Web Designing(HTML, CSS, JAVA Script, PHP, MYSQL)
- Java, C++ Programming

Commencement in November 2021
At Our Jaffna Centre along
(Jaffna College Undergraduate dept. Building)
464 Hospital Road
Jaffna.
For further details contact
Tel no: 0212250975/0212223382
Email: ejcit@sltnet.lk.

## இழுவை வலைப் படகு உரிமையாளர்களுக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அறிவுறுத்தல்

ஆய்வுகளின் அடிப்படையில் அனுமதிக்கப்பட்ட இடங்களில் மாத்திரமே உள்ளூர் இழுவை வலை படகுகள் தொழிலில் ஈடுபட வேண்டும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

குருநகர் கடற்றொழிலாளர் சங்கத்தில் நேற்று(வெள்ளிக்கிழமை) இடம்பெற்ற பிரதேச கடற்றொழிலாளர்களுடனான சந்திப்பின் போதே கடற்றொழில் அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

குருநகர் பிரதேசத்தில் சுமார் 400 உள்ளூர் இழுவைப் படகுகள் தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள நிலையில், நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் சார்ந்த ஒரு பிரிவினர், உள்ளூர் இழுவைப் படகுகள் தடை செய்யப்பட வேண்டும் என்ற கருத்தை முன்வைத்து வருகின்றமையுடன் கடற்றொழில் அமைச்சருக்கு எதிரான குற்றச்சாட்டுக்களையும் முன்வைத்து வருகின்றனர்.

இந்நிலையில், குருநகர் பிரதேச கடற்றொழிலாளர்களை சந்தித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா –

இலங்கையின் கடல் வளத்தை அழிக்கின்ற அடிமட்ட இழுவை வலைப் படகுகளை எந்தக் காரணத்துக்காகவும் அனுமதிக்க முடியாது எனவும், தற்போது இழுவை வலைப் படகுகளைப் பயன்படுத்துகின்ற உள்ளூர் கடற்றொழிலாளர்கள், கடலின் அடித்தளத்தைப் பாதிக்காத வகையில் நாரா நிறுவனத்தால் அடையாளப்படுத்தப்பட்ட பிரதேசங்களில் மாத்திரம் தொழிலில் ஈடுபட முடியுமெனவும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பயணப்பையில் பெண்ணின் சடலம் அடையாளம் காணப்பட்டுள்ளது

சப்புகஸ்கந்தை பகுதியில் பயணப் பையொன்றிலிருந்து சடலமாகக் கண்டெடுக்கப்பட்ட பெண்ணின் சடலம் அடையாளம் காணப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதற்கமைய, மாளிகாவத்தை தொடர்மாடி குடியிருப்பைச் சேர்ந்த 42 வயதான பெண்ணொருவரே இவ்வாறு சடலமாகக் கண்டெடுக்கப்பட்டவர் என பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

ராகம வைத்தியசாலையின் பிரேத அறைக்குச் சென்ற குறித்த பெண்ணின் கணவர் சடலத்தை அடையாளம் காண்பித்துள்ளார்.

சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்துக்கு அருகில் உள்ள குப்பைகளைக் கொட்டும் இடமொன்றில் கைவிடப்பட்டிருந்த பயணப்பையிலிருந்து கடந்த வியாழக்கிழமை சடலம் கண்டெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.


அமெரிக்க லொத்தர் வீசா DV-2023

- அமெரிக்காவில் நிரந்தர குடியுரிமை பெறுவதற்கான வீசா விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.
- 18 வயதிற்கு மேற்பட்ட எவரும் விண்ணப்பிக்கலாம்.
- பிரதான விண்ணப்பதாரிக்கு கடவுச்சீட்டு அவசியம்.
- அமெரிக்க லொத்தர் வீசா சேவையில் கடந்த 22 வருடகாலத்தில் எம்மூடாக விண்ணப்பித்த 1000ற்கு மேற்பட்டவர்கள் தற்போது நிரந்தரமாக அமெரிக்காவில் வாழ்கின்றார்கள்.
- தெரிவு செய்யப்படும் அதிஷ்டசாலிகளுக்கு ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல் அனைத்தும் எம்மால் மேற்கொள்ளப்படும்.

முடிவுத்திகதி - 09.11.2021

குறிப்பு : இறுதிநேர நெருக்கடிகளைத் தவிர்ப்பதற்கு கடைசிவரை காத்திராது இன்றே விண்ணப்பியுங்கள்.



தொடர்புகளுக்கு
அருள் வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை

இல.01, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி.
இல.01, பெற்றோல் செற் எதிரில் பிரதான வீதி, நெல்லியடி.
076 4431 576
இல.10, இ.போ.ச பஸ் டிப்போ எதிரில் பிரதான வீதி, பருத்தித்துறை.
இல.09, அருள் ஜுவல்லறி புதிய மாநகர சபை கட்டடத்தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## இ.தொ.காவினருடன் பிரான்ஸ் தூதர் சந்திப்பு



இலங்கைக்கான பிரான்ஸ் தூதுவர் எரிக் லாவெரடுவுக்கும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான கலந்துரையாடல் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமானின் அமைச்சு அலுவலகத்தில் இடம்பெற்றது.

தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சின் ஊடாக முன்னெடுக்கப்படும் வீடமைப்பு திட்டத்துக்கு இதன்போது பிரான்ஸ் தூதுவர் பாராட்டுத் தெரிவித்துள்ளார் என்று இராஜாங்க அமைச்சரின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

அதேநேரத்தில் அமைச்சின் கீழ் இயங்கும் பிரஜாசக்தி செயற்திட்டத்தினூடாகவும், அமைச்சின் ஊடாகவும் சிறுநடுத்தர பால் உற்பத்தியாளர்களை ஊக்குவிப்பதற்கும் அமைச்சரின் பரிந்துரைக்கு அமைய பிரஜாசக்தி செயற்திட்டத்தின் பணிப்பாளர் செயற்றிட்ட அறிக்கை கையளித்துள்ளார்.

இதன்மூலம் பெருந்தோட்டப் பகுதிகளில் உள்ள சிறு நடுத்தர உற்பத்தியாளர்களை ஊக்குவிப்பதோடு சுற்றுலா மற்றும் முதலீட்டு துறைக்கு பிரான்ஸ் அரசு நேரடிப் பங்களிப்பை வழங்கும் என்று பிரான்ஸ் தூதுவர் உறுதியளித்துள்ளார்.

இந்தச் சந்திப்பில் அமைச்சின் செயலாளர் டி.பி.ஜீ. குமாரசிறி, பிரதமரின் இணைப்புச் செயலாளர் செந்தில் தொண்டமான், இராஜாங்க அமைச்சின் பிரத்தியோக செயலாளர் மொஹமட் காதர், பிரஜாசக்தி செயற்திட்டத்தின் பணிப்பாளர் பாரத் அருள்சாமி, இ.தொ.காவின் கொழும்பு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ரகு இந்திரகுமார் மற்றும் தூதரக அதிகாரிகள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

இறைச்சிக் கோழி விற்பனை

புறோய்லர், கல்பேட்ஸ், பேரன்ஸ் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் சுத்தம் செய்து மிகக் குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.



U.S.A பாம்
குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை.
077 868 9500

‘கம்பவாரிதி’ இலங்கை ஜெயராஜ் தமது ‘உகரம்’ இணையத்தளத்தில் ‘பாட்டும் நானே! பாவமும் நானே!’ என்ற தலைப்பில் வாராந்தம் வரையும் கேள்வி – பதில் பகுதி ‘காலைக்கதிர்’ நாளிதழில் ஒவ்வொரு வாரமும் வெளியாகி வாசகர்களின் அறிவுக்கு தீனியாகிறது.

# பாட்டும் நானே? பாவமும் நானே!




**01. கேள்வி:-** பக்றீரியாக்கள் நிறைந்த இருபதாயிரம் தொன் இயற்கை உரத்தை ஏற்றி வந்து, திருப்பி அனுப்பப்பட்ட சீனக் கப்பல் எங்கெல்லாமோ சுற்றிவிட்டு பெயரையும் நிறத்தையும் மாற்றிக்கொண்டு, பழையபடி நம் கடல் எல்லைக்குள் நுழைந்துவிட்டதாமே?

**பதில் :-** சீனக் கப்பல் மட்டும் சுற்றவில்லை. சீனாவும் நம்மைச் சுற்றத் தொடங்கிவிட்டது. அணைக்க வந்ததாய்க் காட்டிய சீன ‘ட்றகனின்’ நகக்கீறல்கள், நம் இலங்கை அரசின் முதுகில் ஆழப்பதியத் தொடங்கிவிட்டன. இது வெறும் கீறல்தான். கிழிப்பும், பிளப்பும் இனித்தான் நடக்கப்போகின்றன. பாவம், இலங்கை அரசின் நிலை கொதி எண்ணெய்க்குப் பயந்து நெருப்பிற்குள் குதித்த வடையின்



கதைதான்.

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ ‘சுற்றுகிறார் தம்பி சுழலுகிறார், சுருக்காக நாட்டை விழுங்குகிறார்.’ புதிய காத்தவராயன் பாட்டு எப்படி? ஹி..ஹி..**

**02. கேள்வி:-** ஆஸ்திரேலியக் கம்பன் விழாவில் உங்களது ஆசிரியர்களைப் பற்றிப் பேசியபோது நெகிழ்ந்து கண்ணீர் விட்டீர்கள். சிலபேர் அதனை நடிப்பு என்கிறார்கள். நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?

**பதில் :-** தாராளமாகச் சொல்லிவிட்டுப் போகட்டும்! அதுபற்றி எனக்குக் கவலையில்லை. வெறும் கல்லாகக் கிடந்த என்னைச் சிற்பமாக்கி, மற்றவர்கள் வணங்கும்படியாகச் செய்தவர்கள் எனது ஆசான்கள்தான். அவர்கள் இல்லை என்றால் இன்றைய ஜெயராஜ் இல்லை. எனக்கு அறிவை மட்டுமல்லாமல் அன்பையும் அவர்கள் போதித்தார்கள். அந்த அன்பால் தான் கற்றவர்களைவிடச் சமூகம் என்னை அதிகம் மதிக்கிறது. அவர்கள் தந்த நிழலில் தான் நான் நின்று நிமிர்ந்தேன். இன்று எனக்குக் கிடைக்கும் வசதிகள், மரியாதைகள் அனைத்தையும் அனுபவிக்கும் போது அதைக் காண அவர்கள் இல்லை என நெஞ்சு ஏங்குகிறது. அந்த ஏக்கம் தான் கண்ணீராய் வடிந்தது. குருமாரின் வாழ்த்தொன்றே ஒருவனை உயர்த்தப் போதுமானது என்பதே என் வாழ்க்கை அனுபவம்.

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ ‘குருவே சரணம்’ இன்றைய இளையோர்க்குத் தேவையான பதில்.**

**03. கேள்வி:-** இன்றைய இலங்கை அரசின் இக்கட்டான நிலையை எப்படிப் பார்க்கிறீர்கள்?

**பதில் :-** இலங்கை அரசின் நிலை மட்டுமல்ல, இலங்கை மக்களின் நிலையும் ஆபத்தின் விளிம்பை எட்டிக் கொண்டிருக்கிறது. இன்றைய நிலையில் அமெரிக்கா, சீனா, இந்தியா என்ற மூன்று கற்களின் மேல் வைக்கப்பட்ட பானையாகத்தான் இலங்கை அரசு இருக்கிறது. இந்த மூன்று கற்களில் எந்த ஒன்றை நகர்த்தினாலும் பானை விழப்போவது சர்வநிச்சயம். மூன்று கற்களையும் ஒன்றாக வைத்திருக்க முடியப்போவதும் இல்லை. சிங்களப் பெரும்பான்மை மக்கள் தம் இனத்துவேசத்தால் விளைந்திருக்கும் பெருந்தீமையை இனியாவது உணர்வார்களா? கூட இருந்த சகோதரனின் உரிமையை வழங்க மறுக்கப் போய் இன்று தம் உரிமையைப் பிறரிடம் இழக்கும் நிலைக்கு வந்திருக்கிறார்கள் அவர்கள். வள்ளுவன் ‘பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா பிற்பகல் தாமே வரும்’ என்று சும்மா சொல்லவில்லை யாக்கும்.

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ ‘என்னாகிப் போவோம் இனி’ நம் கவிஞர்கள் வெண்பா எழுதிப்பார்க்கலாமே!**

**04. கேள்வி:-** அரசாங்கத்தின் கூட்டுக் கட்சிகள், தேனிலவு முடிந்து மூடை முடிச்சுகளைக் கட்டத் தொடங்கிவிட்டன போல் தெரிகிறதே?

**பதில்:-** அரசியலில் நிரந்தரமான நண்பனும் இல்லை, நிரந்தரமான எதிரியுமில்லை என்பது பலராலும் அடிக்கடி சொல்லப்பட்டு வரும் ஒரு தொடர். பதவியில் கைகோர்க்க வந்தவர்கள் பழியிலும் கைகோர்க்கவா போகிறார்கள்? அரசு நாட்டு மக்களின் முழுமையான வெறுப்புக்கு ஆளாகிவிட்டது. பொருளாதாரம் எப்போது வேண்டுமானாலும் சரியலாம் என்ற நிலைக்கு வந்துவிட்டது. பொருள்களின் விலைகள் ‘சுனாமியாய்’ கரை கடக்கத் தொடங்கிவிட்டன. எந்தப் பிரச்சினையிலிருந்தும் மீளமுடியாமல் தத்தளிக்கிறது நம் அரசகப்பல். அதனைப் பற்றிக்கொண்டு தாமும் மூழ்கிப்போக அக் கட்சிகளுக்குப் பைத்தியமா என்ன?

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ ‘முஸ்தபா முஸ்தபா டோண்ட் வொறி முஸ்தபா, காலம் தான் தோழன் முஸ்தபா, டட பை டட டட பை டட வாழ்க்கைப் பயணம் டட பை டட, மூழ்கின்ற ஷிப்பே ஃபிரண்ட் ஷிப்பா?’ (திருத்தங்கள் எப்படீங்கோ?)**

**05. கேள்வி:-** சீன அரசு மக்கள் வங்கியைக் கறுப்புப் பட்டியலில் சேர்த்துவிட்டதாமே?

**பதில் :-** இது வெறும் மணியோசைதான். யானை இனித்தான் வரப் போகிறது. மக்கள் வங்கி என்ன மக்கள் வங்கி? வெகுசீக்கிரத்தில் நம் மக்களையும் அது அப்பட்டியலில் சேர்த்தாலும் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை.

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ ‘காக்கக் காக்க கதிர்வேல் காக்க’**

**06. கேள்வி:-** நாடாளுமன்ற வாக்களிப்புகளில் அடிக்கடி தலைவர் ஒருபக்கமும் உறுப்பினர்கள் ஒருபக்கமுமாக வாக்களிப்பதும், கேட்டால் மனநீதிப்படி வாக்களிக்க அனுமதித்ததாகச் சொல்வதும் சிறுபிள்ளைத்தனமாக இல்லையா? முஸ்லிம் காங்கிரஸ் எங்கே போய்க் கொண்டிருக்கிறது?

**பதில் :-** தனது ஆளுமையாலும், நிர்வாகத்திறனாலும், தீர்க்கதரிசனச் செயற்பாடுகளாலும் சிதறிக் கிடந்த முஸ்லிம் மக்களை ஒன்று திரட்டி, பேரின அர



சுகளோடு சரிக்குச் சமமாய் நின்று, முஸ்லிம் மக்களின் உரிமைகளை வென்றெடுத்த மாபெரும் தலைவர் ‘அஷ்ரப்’ அவர்களை நினைத்துப் பார்க்கிறேன். அவரது அகால மரணம், முஸ்லிம் மக்களின் எழுச்சிக்கு எதிராக நடந்த விதியின் சதிதான். அத்தகைய ஒரு பெரும் தலைவன் திடீரென மறைந்தால் அந்த இடத்தில் குழப்பங்கள் விளைவது சகஜம்தான்.

இராமாயணத்தில் ‘வாலி’ என்கின்ற ஆற்றல் நிறைந்த வானர அரசன் இறந்த பின்பு, இராமனை நோக்கி, ‘நான் உன்னோடு உடன் வந்து அடிமை செய்யப் போகிறேன்’ என்கிறான் அறிவாளியாகிய அனுமன். அதற்கு இராமன் ’ஆற்றல் மிக்க ஓர் தலைவன் இருந்து ஆண்டு, திடீர் என அவன் மறைந்தால் அவ்விடத்தில் பல குழப்பங்கள் விளையும். ஆகவே அதனைச் சமாளிக்க அறிவாளியாகிய நீ இங்கே தான் இருக்க வேண்டும்’ என்கிறான்.

மு.கா.வின் தற்போதைய நடவடிக்கைகள் இராமன் சொன்ன கூற்றை நிஜமாக்குமாப்போல் தெரிகின்றன. தலைவர் ஒரு பக்கமும் உறுப்பினர்கள் ஒருபக்கமுமாக வாக்களிப்பது விளையாட்டுத்தனமான வேலை. மனச்சாட்சியின்படி வாக்களிப்பு என்று சொல்லி வாக்காளர்களின் காதில் பூச்சுற்றுகிறார்கள். எல்லோரையும் திருப்திப்படுத்தும் முயற்சி இது. எல்லோரையும் திருப்திப்படுத்த நினைக்கிறவன் ஒருவரையும் திருப்திப்படுத்த மாட்டான் என்பது அனுபவச் செய்தி.

ஒன்று, எல்லோருமாகச் சேர்ந்து நாடகம் போடுகிறார்கள் அல்லது தலைவர் ‘ரவூப் ஹக்கீமின்’ கையை விட்டு ‘வண்டில் மாடுகளின் மூக்கணாங்கயிறு’ நழுவத்தொடங்கிவிட்டது. இதில் எது உண்மை என்பதைக் காலம் விரைவில் வெளிப்படுத்தும்.

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ ‘மேலும் கீழும் கோடுகள் போடு அதுதான் ஓவியம். நீ சொன்னால் காவியம்.’**

**07. கேள்வி:-** நீங்களும் கம்பன் விழாவை ‘சூம்’ வழியாக நடத்திப் பார்க்கலாமே?

**பதில் :-** எங்களது கம்பன் விழாக்களின் விரிவு ‘சூமுக்குள்’ அடங்கும் எல்லையைக் கடந்துவிட்டபடியால் அது சாத்தியமாகும் என்று தோன்றவில்லை.

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ கம்பன் விருது காட்சிக்குள் அடங்குமா?**

**08. கேள்வி:-** மனதில் கைவைத்துச் சொல்லுங்கள். நீங்கள் வாழ்க்கையில் பிழைகள் செய்ததே இல்லையா? செய்திருந்தால் ஒரு கேள்வி. உங்களுக்கு புகழ் தரத்தக்க விடயங்களை எல்லாம் வெளிப்படுத்துகிற நீங்கள் ஏன் அப்பிழைகளை பகிரங்கப்படுத்துவதில்லை?

**பதில் :-** நிறையப்பிழைகள் செய்திருக்கிறேன்! பிழைகளே செய்யாதவர்கள் என்று உலகில் ஒருவரும் இருக்கமாட்டார்கள் என்பது என் கருத்து. என்னைக் காப்பாற்றிக் கொள்ள இதனைச் சொல்வதாய் தயவு செய்து நினைக்காதீர்கள். யதார்த்தத்தைச் சொல்கிறேன். அவ்வளவுதான்.

அப்படியானால் பிழைகள் செய்த உங்களை நாம் ஏன் மதிக்கவேண்டும் என்று கேட்பீர்கள்? மதிப்பதும் மதிக்காததும் உங்கள் விருப்பம். அது பற்றிய எந்த ஏக்கமும் எனக்குள் இல்லை. நீங்கள் கேட்டபடியால் ஒன்றைச் சொல்கிறேன். என் வாழ்க்கை இளமையின் கட்டுப்பாட்டிலிருந்து, நிதானித்த அறிவின் கட்டுப்பாட்டுக்குள் அது வந்த பிறகு ஒவ்வொரு நாளும் நான் என்னைச் சுத்தப்படுத்தியபடி இருக்கிறேன். ஒன்றை என்னால் உறுதியாய்ச் சொல்லமுடியும். நேற்றிருந்த ஜெயராஜைவிட இன்றிருக்கும் ஜெயராஜும், இன்றிருக்கும் ஜெயராஜைவிட நாளை இருக்கப்போகும் ஜெயராஜும் நிச்சயம் நல்லவர்களாய்த்தான் இருப்பார்கள். அது உறுதி.

அடுத்த உங்களது கேள்விக்கும் பதில் சொல்லிவிடுகிறேன். மற்றவர்களுக்குத் தெரிந்தால் என்ன தெரியாமல் விட்டால் என்ன, நான் செய்த பிழைகளை என் நெஞ்சு அறியும். என் பிழைகளை அறிந்து மற்றவர்கள் செய்யப் போகிற துன்பத்தைவிட என் நெஞ்சு எனக்குச் செய்யும் துன்பம் அதிகம். அதனால் அவற்றைப் பகிரங்கப்படுத்துவதால் எனக்கு ஆகப்போகும் நஷ்டம் ஒன்றுமில்லை. அப்படியிருந்தும் என் பிழைகளை நான் பகிரங்கப்படுத்தாதற்குக் காரணம் இருக்கிறது. அவற்றைப் பகிரங்கப்படுத்துவதால் மற்றவர்களுக்கு எந்த நன்மையும் ஏற்படப் போவதில்லை. ஏற்படுமானால் அதனையும் வெளிப்படுத்தத் தயங்கமாட்டேன்.

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ No Commence. Only hats off.**



இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

- செல்லத்துரை ரவீந்திரன் -

## அங்கம் - 183

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

**463.தீர்ப்பாயம் ஆதாரப்படுத்திய கூற்றுக்கள் எவை? யாரால் வெளிப்படுத்தப் பட்டன?**

இவை சிங்கள மக்களின் தலைவர்களாக இருந்த, அவர்களது நலன்களுக்கு முன்னுரிமை தரவேண்டுமானதால் தமிழ் மக்களுக்கு எதிராகக் காட்டப்படும் பாகுபாடுகள் பற்றி ஏதும் பெரிதாக அலட்டப்படத் தேவையில்லை என்று பதவிக்கு வந்த எல்லாப் பிரதம மந்திரிகள், ஜனாதிபதிகளாலும் தெரியப்படுத்தப்பட்டன.

அவற்றில் சிலவற்றை இனப்படுகொலையின் குறிப்பிட்ட நோக்கத்தை உணர்த்துவனவாக தீர்ப்பாயம் கருதி தங்களது தீர்ப்பில் இணைத்தது.

**சுதந்திர இலங்கையின் முதல் பிரதமர் டி.எஸ். சேனநாயக்க (1947 - 1952) கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்கள் செறிந்து வாழ்ந்த பிரதேசங்களில் சிங்கள குடியேற்ற காரருக்கு கூறியது:-**


டி.எஸ்.சேனநாயக்கா

"இன்று நீங்கள் இங்கு கொண்டுவரப்பட்டு, உங்களுக்கு காணியும் தரப்பட்டுள்ளது. நீங்கள் உங்கள் கிராமங்களிலிருந்து வேரோடு பிடுங்கி இங்கு கொண்டுவரப்பட்டுள்ளீர்கள். கடலில் திக்கு தெரியாமல் மிதந்து கொண்டிருக்கும் சறுக்கல் மரம் மாதிரி உணர்வீர்கள். ஆனால் ஒன்றை நினைவில் கொள்ளுங்கள். அப்பொழுது இந்த முழு நாடும் உங்களை நோக்கியே தங்கள் பார்வையைத் திருப்புவார்கள். சிங்கள மக்களின் கடைசி யுத்தம் இந்த பதவியா மண்ணில்தான் நிகழும். இந்த நாட்டின் எதிர்காலத்தை உங்கள் தோள்களில் சுமக்கும் ஆண்களும் பெண்களும் நீங்களே. இந்நாட்டை பிரிக்க முயல்பவர்கள் உங்களோடு மல்லுக்கட்ட வேண்டும். நாடு சில வருடங்களுக்கு உங்களை மறக்கலாம். ஆனால் மிக விரைவாக ஒரு நாள் நீங்கள்தான் சிங்களவரின் கோட்டை என அவர்கள் உணர்வார்கள்"

(இந்தப் பேச்சின் ஆதாரம் எச்.எம். குணரத்தினாவின் "ஓர் இறைமையுள்ள நாட்டுக்காக"(For a A Sovereign State) என 1988 இல் சர்வோதய பதிப்பகம் வெளியீட்டிலிருப்பது)

**சிலோன் டெய்லி நியூஸ் (Ceylon Daily News) 14 நவம்பர் 1955 எஸ்.டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்க பிரதம மந்திரி அளித்த பேட்டியிலிருந்து:-**


எஸ்.டி.பண்டாரநாயக்கா

"சமத்துவம் கொடுக்கப்பட்டால் அது சிங்கள இனத்துக்கு அழிவாக முடியும். தமிழர் தங்களது மொழி, கலாச்சாரங்கள், அவர்களுக்கெனத் தனியாக இருக்கும் இனத்தின் பண்புகள் எல்லாவற்றையும் கொண்டு எங்கள் மேல் ஆதிக்கம் செய்வார்கள்."

**1965 - 1965 இலும் பின் 1970 - 1977 காலங்களிலும், முக்கியமாக தமிழரசுக்கட்சி மொழி, அரசியல் உரிமைகள் கோரி நடத்திய சத்தியாகிரகம் பற்றி 26 ஏப்ரல் 1961 இல் பிரதம மந்திரி சிறிமாவோ பண்டாரநாயக்கா நாட்டு மக்களுக்கு விடுத்த அறிக்கையில்:-**


சிறிமாவோ பண்டாரநாயக்கா

"வடக்கிலும், கிழக்கிலும் உள்ள தமிழரசுக் கட்சியின் ஆதரவாளர்கள், மலையகத்திலுள்ள தோட்டத்தொழிலாளர்களையும் நாட்டின் ஏனைய பகுதிகளிலுமுள்ள அவர்களது நண்பர்களும் ஆதரவாளர்களும் இந்த அரசாங்கத்துக்கு ஆணைகள் தந்து. அந்த ஆணைகளுக்கு அரசாங்கம் ஒத்துவராவிட்டால் நாட்டின் பொருளாதாரத்தை முடக்குவோம் என அச்சுறுத்துவதை நாங்கள் ஏற்கோம். இந்த நாட்டினதும் அதன் மக்களினதும் எதிரிகளையும் நோக்கி ஒவ்வொருவரும் ஒன்று பட வேண்டிய தருணம், உங்களது கடமையை செய்வதற்கு நீங்கள் ஒவ்வொருவரும் தயாராக இருக்க வேண்டும்."

**ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன டெய்லி டெலிகிராப் (Daily Telegraph) பத்திரிகைக்கு 11 ஜூலை 1983 கொடுத்த பேட்டியிலிருந்து:-**


ஜே.ஆர்.ஜெயவர்தனா

"நான் தமிழ் மக்களினுடைய அபிப்பிராயங்களை பற்றிக் கவலைப்படவில்லை. இப்பொழுது நாங்கள் அவர்களைப் பற்றிச் சிந்திக்க முடியாது. அவர்களது உயிர்களை பற்றியோ அல்லது அவர்களது அபிப்பிராயங்களையோ கணக்கெடுக்கத் தேவையில்லை. எவ்வளவு தூரம் வடக்கிலுள்ள மக்களுக்கு எதிராக நாங்கள் அழுத்தங்கள் தருகிறோமோ அவ்வளவுக்கு சிங்கள மக்கள் இங்கு சந்தோஷப்படுவார்கள். நான் தமிழ் மக்களை பட்டினி போட்டால் அதற்காக சிங்கள மக்கள் மகிழ்ச்சி கொள்வார்கள்."

**ஜனாதிபதி டி.பி.விஜேதுங்கா 5 பெப்ரவரி 1994 இல் மத்திய மாகாணத்தில் நடத்திய தேர்தல் பிரசார உரையின் ஒரு பகுதியிலிருந்து:-**


டி.பி.விஜேதுங்க

"நான் இந்த நாடு சிங்களவருக்குத்தான் உரியது என்று தான் பலமாக நம்புகிறேன். ஆனால் இங்கு சில சிறுபான்மையினரும் இருக்கிறார்கள். அவர்களை எமது மக்களாகவே கருதுகிறோம். நாங்கள் 75 வீதமாக இருப்பதால் எங்களது நாட்டை நாங்கள் விட்டுக்கொடுக்க மாட்டோம். அதனைப் பாதுகாப்போம். அவர்கள் இந்த நாட்டில் எங்களோடு வாழலாம். ஆனால் சிறுபான்மையினர் என்று கோஷத்துக்குள் தேவையற்றவற்றைக் கேட்கக்கூடாது."

**ஜெனரல் சரத் பொன்சேகா இராணுவத் தளபதியாக இருந்த போது 23 செப்டம்பர் 2008 இல் National Post என்ற ஊடகத்திற்குச் சொல்லியவை:-**


சரத் பொன்சேகா

"மூன்று வருடங்களுக்கு முன்னரே எங்களது சொல்லகராதிகளிலிருந்து சிறுபான்மையினர் என்ற வார்த்தையை எடுத்துவிட்டோம். இனிமேல் இங்கு தமிழர், முஸ்லிம் பறங்கியர், மலாய் என்பன போன்ற சிறுபான்மையினர் இருக்க முடியாது. இங்கு, இப்பொழுது இரண்டு வகையான மக்கள்தான் இருக்கிறார்கள். ஒன்று இந்த நாட்டை நேசிப்பவர்கள். மற்றது தாங்கள் பிறந்த இந்த நாட்டுக்கு எதுவித நேசமும் காட்டாதவர்கள். அப்படியானவர்கள் இப்பொழுது குறைக்கப்பட்டுள்ளார்கள்."

**ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ 19 மே 2009 சம்பிரதாய பூர்வமாக ஸ்ரீலங்கா நாடாளுமன்றத்தை அங்குரார்ப்பணம் செய்து வைத்து பேசியதன் ஒரு பகுதி:-**


மஹிந்த ராஜபக்ஷ

"எந்த ஒரு நாடும் பயங்கரவாதத்தை முறியடித்த பின் அங்கு பயங்கரவாதிகளின் அரசியல் முகப்பான அமைப்புக்களுக்கு இடம் கொடுத்ததில்லை. அந்த நாடுகள் அப்படியான அரசியல் முகப்புகளை இல்லாமற் செய்ய வெற்றிகொள்ள அரசியலும் சட்டவழிகளும் ஏற்படுத்துகிறார்கள். ஆனால் ஸ்ரீலங்கா அரசு அப்படியான நடவடிக்கைகள் எதையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிராகச் செய்யவில்லை. அதன் எதிரொலி இன்று வடமாகாண சபைத் தேர்தலில் தெரிகிறது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஸ்ரீலங்கா அரசுக்கும் அதன் மக்களுக்கும் அதன் இறைமைக்கும் சவால் விடுக்கும் நோக்கம் எதுவும் அதன் வடமாகாண அரசியல் வெற்றியிலிருந்து நினைத்தால் தமிழ் சமுதாயமும் அவர்களுடைய சந்ததிகளும் திரும்பவும் நந்திக்கடலை சந்திக்க வேண்டி வரும்."

**பாட்டாலி சம்பிக்க ரணவக்கா, அரசின் மந்திரியும் தேசிய பாரம்பரிய கட்சியின் (National Heritage Party) 23 செப்டெம்பர் 2013 இல் தமிழ் தேசிய கூட்டணியின் தேர்தல் வெற்றியை பற்றி குறிப்பிட்டு கூறியவை:-**


சம்பிக்க ரணவக்க

"நந்திக்கடல் - மே 2009 இல் பல பொதுமக்களும் விடுதலைப் புலிகளின் போராளிகளும் கொல்லப்படுவதற்கான இடம். அது நினைவில் வேண்டும்.

- சமர்ப்பிக்கப்பட்ட பலவற்றிலிருந்து சுதந்திரம் பெற்ற நாளிலிருந்தே இந்த நோக்கம் இருந்ததென இவை தெரியப் பட்டன"

(வளரும் .......)

இந்தவாரம் இவர்

ஆக்கம் - ப்ரியமதா பயஸ்

# பல தடைகளை கடந்து மின்சாரம் பயன்படுத்தும் முறையை மாற்றியமைத்த சிறந்த மின் பொறியியலாளர்

## நிக்கோலா டெஸ்லா

நிக்கோலா டெஸ்லா - குரொவேசிய இராணுவ முன்னரங்கப்பகுதியில் உள்ள சிமில்ஜான் என்னும் இடத்தில் 1856 வருடம், ஜூலை 10ஆம் திகதி பிறந்தார்.

1861 ஆம் ஆண்டில், டெஸ்லா ஸ்மில்ஜானில் ஆரம்பப் பள்ளியில் ஜேர்மன், எண்கணிதம் மற்றும் மதம் பயிலத் தொடங்கிய அவர் ஆரம்பப்பள்ளி நடுநிலைப்பள்ளியை முடித்து, 1870 ஆம் ஆண்டில், கார்லோவாக்கிற்கு உயரியல் ஜிம்னாசியத்தில் உயர்நிலைப் பள்ளிக்குச் சென்றார்.

சிறுவனாக இருந்தபோது, டெஸ்லா நயாகரா நீர்வீழ்ச்சியின் படத்தைப் பார்த்து, குரோஷியாவின் லிகாவில் உள்ள தனது மாமாவிடம், நகரும் நீரின் சக்தியைப் பயன்படுத்த நீர்வீழ்ச்சியின் கீழ் ஒரு சக்கரத்தை வைக்க விரும்புகிறேன் என கூறியுள்ளார்.

டெஸ்லாவால் கால்குலஸ் கணிதத்தை மனதிற்குள்ளேயே (மூளைக்குள்) செய்ய முடிந்ததால் முதலில் ஆசிரியர்கள் அவர் ஏமாற்றுகிறார் என எண்ணினர். ஆனால் அவரது அறிவுத் திறமையால் நான்கு ஆண்டுகால படிப்பை, மூன்று ஆண்டுகளில் முடித்து 1873 இல் பட்டம் பெற்றார்.

1873 இல் டெஸ்லா ஸ்மில்ஜானுக்கு திரும்பினார். அவர் வந்த சிறிது நாள்களிலேயே அவர் கொலரா நோயால் பாதிக்கப்பட்டு, ஒன்பது மாதங்கள் படுக்கையில் இருந்ததுடன், பல முறை மரணத்திற்கு அருகில் சென்று திரும்பியிருக்கிறார். விரக்தியின் தருணத்தில் டெஸ்லாவின் தந்தை அவர் நோயிலிருந்து மீண்டால் அவரை சிறந்த பொறியியல் பள்ளிக்கு அனுப்புகிறேன் என உறுதியளித்தார்.

அப்பொழுது இராணுவத்தில் கட்டாயம் பணிபுரியவேண்டிய சூழ்நிலையில் இருந்து தலைமறைவாகி, ஒன்பது மாதங்கள் குரோஷியாவின் மலைப்பகுதிகளில் ஒரு வேட்டைக்காரனின் ஆடை மற்றும் ஒரு மூடை புத்தகங்களுடன் சுற்றி இருக்கிறார்.

இயற்கையுடனான இந்த தொடர்பு அவரை உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் வலிமைப்படுத்தியது என்று கூறியுள்ள டெஸ்லா, மார்க் ட்வைனின் படைப்புகள் அவரது முந்தைய நோயிலிருந்து அற்புதமாக மீட்க உதவியதாகக் கூறியுள்ளார்.

1875 இல் இராணுவ எல்லைப் ஸ்காலர்ஷிப்பில் கிராஸில் உள்ள இம்பீரியல் - ரோயல் தொழில்நுட்பக் கல்லூரியில் சேர்ந்த முதல் ஆண்டில் டெஸ்லா ஒரு வகுப்பைக்கூட தவறவிடவில்லை. முடிந்தவரை அதிக மதிப்பெண்களைப் பெற்றார், 7 தேர்வுகளில் வெற்றி பெற்றால் போதும் என்ற நிலையில் 9 தேர்வுகளில் வெற்றி பெற்றார். அங்கு பேராசிரியர் ஜாகோப் பால் வழங்கப்பட்ட மின்சாரம் பற்றிய விரிவான விரிவுரைகளால் டெஸ்லா ஈர்க்கப்பட்டார்.

இரண்டாவது ஆண்டின் இறுதியில் டெஸ்லா தனது கல்வி உதவித்தொகையை இழந்து சூதாட்டத்திற்கு அடிமையாகி, மூன்றாம் ஆண்டு கல்வி உதவித்தொகையின் மூலம் இழந்ததை திரும்பப் பெற்று தனது குடும்பத்திற்கு அனுப்பியதுடன் தேர்வு நேரத்தில் படிப்பதற்கு அதிக நேரம் கேட்டார் எனவும் மூன்றாம் ஆண்டில் மதிப்பெண்கள் பெறாததால்






பட்டம் பெறவில்லை எனவும் கூறப்படுகிறது.

டிசெம்பர் 1878 இல் டெஸ்லா கிரேஸை விட்டு வெளியேறியதுடன் அவர் கல்லூரியை விட்டும் வெளியேறினார் என்ற உண்மையை மறைப்பதற்காக அவரது குடும்பத்துடனான அனைத்து உறவுகளையும் துண்டித்துக்கொண்டார். அவர் அருகில் உள்ள முர் ஆற்றில் மூழ்கிவிட்டார் எனதாக அவரது நண்பர்கள் நினைத்திருந்த வேளையில், டெஸ்லா மாரிபோருக்கு குடிபெயர்ந்தார். அங்கு அவர் மாதத்திற்கு 60 ஃப்ளோரின்களுக்கு வரைவாளராகப் பணியாற்றினார்.

மார்ச் 1879 இல் டெஸ்லாவின் தந்தை மாரிபோருக்கு சென்று மகனை வீடு திரும்பும்படி கெஞ்சினார் ஆனால் அவர் மறுத்துவிட்டார். 24 மார்ச் 1879 இல், குடியிருப்பு அனுமதி இல்லாததால் பொலிஸ் பாதுகாப்பில் டெஸ்லா கோஸ்பிக்கிற்கு திருப்பி அனுப்பப்பட்டார்.

1881 ஆம் ஆண்டில், டெஸ்லா ஹங்கேரியின் புடாபெஸ்டுக்கு புடாபெஸ்ட் டெலிபோன் எக்ஸ்சேஞ்ச் என்ற தந்தி நிறுவனத்தில் திவதர் புஸ்கேஸின் கீழ் பணிபுரிந்தார். வந்தவுடன் கட்டுமானத்தில் இருந்த நிறுவனம் செயல்படவில்லை என்பதை உணர்ந்தார், எனவே அவர் அதற்கு பதிலாக சென்ட்ரல் டெலிகிராப் அலுவலகத்தில் வரைவாளராக பணியாற்றினார்.

சில மாதங்களுக்குள், புடாபெஸ்ட் டெலிபோன் எக்ஸ்சேஞ்ச் செயல்படத் தொடங்கியது. டெஸ்லாவுக்கு தலைமை எலக்ட்ரீஷியன் பதவி ஒதுக்கப்பட்டது. டெஸ்லா தனது வேலைவாய்ப்பின் போது, சென்ட்ரல் ஸ்டேன் கருவிகளில் பல முன்னேற்றங்களைச் செய்தார் மற்றும் ஒரு தொலைபேசி ரிபீட்டர் அல்லது ஆம்ப்ளிஃபயரைக் கண்டுபிடித்தார் எனவும் இதற்காக எதுவும் வாங்கவில்லை என்பதும், வெளியில் யாரிடமும் இதைப்பற்றி சொல்லக்கூடவில்லை என்றும் கூறப்படுகிறது.

1882 ஆம் ஆண்டில், கான்டினென்டல் எடிசன் நிறுவனத்தில் பாரிஸில் டெஸ்லாவுக்கு மற்றொரு வேலை கிடைத்தது. மின்சக்தி பயன்பாட்டு வடிவத்தில் நகரெங்கும் ஒளிரும் விளக்குகளை நிறுவினார். நிறுவனம் பல உள்பிரிவுகளைக் கொண்டிருந்தது



டெஸ்லா சோசிட்டே எலக்ட்ரிக் எடிசனில் பணிபுரிந்தார். இது விளக்கு அமைப்பை நிறுவும் பொறுப்பில் உள்ள பாரிஸின் ஐவ்ரி - சுர் - சீன் புறநகரில் உள்ள பிரிவாகும்.

அங்கு அவர் மின் பொறியியலில் பெரும் நடைமுறை அனுபவத்தைப் பெற்றார். மேலாண்மை பொறியியல் மற்றும் இயற்பியலில் அவரது மேம்பட்ட அறிவை வளர்த்ததுடன், விரைவில் அவர் டைனமோக்கள் மற்றும் மோட்டார்கள் உருவாக்கும் மேம்பட்ட பதிப்புகளை வடிவமைத்து உருவாக்கினார். பிரான்ஸை சுற்றிலும் ஜேர்மனியிலும் கட்டப்பட்ட மற்ற எடிசன் பயன்பாடுகளில் பொறியியல் சிக்கல்களைச் சரிசெய்யவும் அவரை அனுப்பினார்கள்.

1884 ஆம் ஆண்டில் பாரிஸ் நிறுவனத்தை மேற்பார்வையிட்ட எடிசன் மேலாளர் சார்லஸ் பேட்சலர், நியூயோர்க் நகரத்தில் அமைந்துள்ள எடிசன் மெஷின் வேர்க்ஸ் என்ற உற்பத்திப் பிரிவை நிர்வகிக்க டெஸ்லாவை அமெரிக்காவிற்கு வருமாறு கேட்டதன் மூலம் டெஸ்லா அமெரிக்காவில் குடியேறி, மன்ஹாட்டனின் லோயர் ஈஸ்ட் சைடில் உள்ள மெஷின் வேர்க்ஸில் உடனடியாக வேலை செய்யத் தொடங்கினார்.

டெஸ்லா மெஷின் வேர்க்ஸில் ஆறு மாதங்கள் பணிபுரிந்த அவர் வேலையை விட்டு வெளியேறியதற்கு, ஜெனரேட்டர்களை மறுவடிவமைப்பதற்கு அல்லது வளைவு விளக்கு அமைப்பிற்காக அவருக்கு கொடுப்பதாக சொல்லப்பட்ட போனஸ் தொகை கொடுக்கப்படாததே காரணமாக இருக்கலாம் என்று கூறப்படுகிறது. அந்த நிறுவனத்தில் அந்த அளவு பணம் இல்லை என்று கூறப்பட்டதாகவும் தெரிகிறது.

எடிசன் நிறுவனத்தை விட்டு வெளியேறிய உடனேயே, டெஸ்லா ஒரு ஆர்க் லைட்டிங் சிஸ்டத்திற்கு காப்புரிமை பெறும் பணியில் ஈடுபட்டிருந்தார், ஒருவேளை அவர் எடிசனில் உருவாக்கிய அதே அமைப்பாக இருக்கலாம் என்று சொல்லப்படுகிறது. மார்ச் 1885 இல், காப்புரிமையை சமர்ப்பிப்பதில் உதவி பெற எடிசன் பயன்படுத்திய அதே வழக்கறிஞரான காப்புரிமை வழக்கறிஞர் லெமுவல் டபிள்யூ. செர்ரலை சந்தித்தார்.

டெஸ்லாவின் பெயரில் ஒரு ஆர்க் லைட்டிங் உற்பத்தி மற்றும் பயன்பாட்டு நிறுவனத்திற்கு, டெஸ்லா எலக்ட்ரிக் லைட் அண்ட் மேனுபக்சரிங்கிற்கு நிதியளிக்க ஒப்புக்கொண்ட இரண்டு வணிகர்களுக்கு (ராபர்ட் லேன் மற்றும் பெஞ்சமின் வேல்) ஆகியோருக்கு செர்ரெல் டெஸ்லாவை அறிமுகப்படுத்தினார்.

டெஸ்லா ஆண்டின் எஞ்சிய காலம் முழுவதும் மேம்படுத்தப்பட்ட டிசி ஜெனரேட்டர், அமெரிக்காவில் டெஸ்லாவுக்கு வழங்கப்பட்ட முதல் காப்புரிமைகள் மற்றும் நியூ ஜெர்சியின் ரஹ்வேயில் அமைப்பை உருவாக்கி நிறுவுதல் உள்ளிட்ட காப்புரிமைகளைப் பெற்றார்.

புதிய வகையான மாற்று மின்னோட்ட மோட்டார்கள் மற்றும் மின் பரிமாற்ற கருவிகளுக்கான டெஸ்லாவின் யோசனைகளில் முதலீட்டாளர்கள் சிறிதும் ஆர்வம் காட்டவில்லை. அவர்கள் ஒரு புதிய பயன்பாட்டு நிறுவனத்தை உருவாக்கி, டெஸ்லாவின் நிறுவனத்தை கைவிட்டு, பணமில்லாமல் விட்டுவிட்டனர்.

டெஸ்லா அவர் உருவாக்கிய காப்புரிமைகளின் கட்டுப்பாட்டைக் கூட இழந்தார். இந்த நேரத்தில் அவர் பல்வேறு மின் பழுதுபார்க்கும் வேலைகளை செய்ததுடன், ஒரு நாளைக்கு 2 டொலர் கூலிக்கு பள்ளம் தோண்டும் வேலைகளையும் செய்துவந்துள்ளார்.

பிற்கால வாழ்க்கையில் டெஸ்லா 1886 ஆம் ஆண்டின் ஒரு பகுதியை கஷ்டமான நேரமாக விவரித்தார், அறிவியல், இயக்கவியல் மற்றும் இலக்கியத்தின் பல்வேறு துறைகளில் எனது உயர் கல்வி எனக்கு ஒரு கேலி போல் தோன்றியது என்று குறிப்பிட்டுள்ளார்.

(10 பக்கம் பார்க்க)

காலைக்கதிர் Kalaikkathir

# அமைச்சர்கள் மற்றும் பிரமுகர்கள் ஆகியோரின் பாதுகாப்பு வாகனங்கள் குறைக்கப்பட வேண்டும்

## இராஜாங்க அமைச்சர் தயாசிறி வலியுறுத்தல்

இலங்கையில் அமைச்சர்கள் மற்றும் பிரமுகர்களின் வாகனங்களுக்குப் பின்னால் பயணிக்கும் பாதுகாப்பு வாகனங்களை பயன்படுத்துவதை எவராவது நிறுத்தினால் அது பெரும் நிவாரணமாக அமையும் என கைத்தறி மற்றும் உள்ளூர் ஆடை உற்பத்திகள் இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

நாடு தற்போது முகங்கொடுத்துள்ள இக்கட்டான சூழ்நிலையில் நாட்டின் நலனுக்காக இது அவசியம் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில், அமைச்சர்கள் உட்பட அமைச்சகத்தின் செலவுகள் முற்றிலுமாகக் குறைக்கப்பட்டுள்ளன.

இந்த ஆண்டு புதிய வாகனங்களைக் கொள்வனவு செய்ய, கட்டுமானம், புனரமைப்பு அல்லது தளபாடங்கள் கொள்வனவு செய்வதற்குக் கூட அமைச்சகங்களுக்கு நிதி ஒதுக்கப்படவில்லை. இந்த நெருக்கடி வரும் ஆண்டுகளில் இன்னும் மோசமாகும்.

இந்த அர்ப்பணிப்பை மேற்கொள்வது யதார்த்தமாகும். இந்தநிலையில் பாதுகாப்பு வாகனங்களைப் பயன்படுத்துவதை நிறுத்த யாராவது முன்வந்தால் அது பெரிய நிம்மதியாக இருக்கும் என்றும் தயாசிறி ஜெயசேகர குறிப்பிட்டுள்ளார்.

# பல தடைகளை ........

(09ஆம் பக்கத் தொடர்ச்சி)

1886 இன் பிற்பகுதியில், டெஸ்லா ஆல்ஃபிரட் எஸ். பிரவுன், வெஸ்டர்ன் யூனியன் கண்காணிப்பாளர் மற்றும் நியூயோர்க் வழக்கறிஞர் சார்லஸ் பிளெட்சர் பெக் ஆகியோரை சந்தித்தார். இருவரும் நிறுவனங்களை அமைப்பதில் அனுபவம் பெற்றவர்களாக இருந்தமையுடன், நிதி ஆதாயத்திற்காக கண்டுபிடிப்புகள் மற்றும் காப்புரிமைகளை ஊக்குவித்தனர்.

தெர்மோ - காந்த மோட்டார் யோசனை உட்பட மின் சாதனங்களுக்கான டெஸ்லாவின் புதிய யோசனைகளின் அடிப்படையில், அவர்கள் டெஸ்லாவை நிதி ரீதியாக ஆதரிக்கவும், அவருடைய காப்புரிமைகளை கையாளவும் ஒப்புக்கொண்டனர். அவர்களுடன் சேர்ந்து ஏப்ரல் 1887 இல் டெஸ்லா எலக்ட்ரிக் நிறுவனத்தை உருவாக்கினர்.

அவர்கள் மன்ஹாட்டனில் உள்ள 89 லிபர்ட்டி தெருவில் டெஸ்லாவுக்காக ஒரு ஆய்வகத்தை அமைத்தனர், அங்கு அவர் புதிய வகை மின் மோட்டார்கள், ஜெனரேட்டர்கள் மற்றும் பிற சாதனங்களை மேம்படுத்தி உருவாக்கினார்.

1887 ஆம் ஆண்டில் மாற்று மின்னோட்டத்தில் இயங்கக்கூடிய ஒரு தூண்டல் மோட்டாரை உருவாக்கினார். இது நீண்ட தூர மற்றும் உயர் மின்னழுத்த பரிமாற்றத்தில் நன்கு செயல்படக்கூடியதாக இருந்ததன் காரணமாக ஐரோப்பா, அமெரிக்காவில் வேகமாக விரிவடைந்தது. 1888 இல் காப்புரிமை பெறப்பட்டது.

ஜூலை 1888 இல், பிரவுன் மற்றும் பெக் ஆகியோர் ஜார்ஜ் வெஸ்டிங்ஹவுஸுடன் டெஸ்லாவின் பாலிபேஸ் தூண்டல் மோட்டார் மற்றும் மின்மாற்றி வடிவமைப்புகளுக்கு 60,000 மற்றும் ஒவ்வொரு மோட்டாரால் தயாரிக்கப்படும் ஏசி குதிரைத்திறனுக்கு 2.50 றொயல்ட்டி ஒப்பந்தம் செய்தனர். வெஸ்டிங்ஹவுஸ் ஒரு வருடத்திற்கு டெஸ்லாவை 2,000 க்கு வெஸ்டிங்ஹவுஸ் எலக்ட்ரிக் அண்ட் உற்பத்தி நிறுவனத்தின் பிட்ஸ் பர்க் ஆய்வகங்களில் ஆலோசகராக நியமித்தது.

அதன்பிறகு லண்டனில் உள்ள பாரிங்ஸ் வங்கி நலிவடைந்ததன் காரணமாக முதலீட்டாளர்கள் வெஸ்டிங்ஹவுஸ்க்கு கொடுக்கப்பட்ட கடன்களை திரும்ப பெற முயற்சித்ததில், டெஸ்லாவுக்கு வழங்கி வந்த றொயல்ட்டியில் பிரச்சினை ஏற்பட்டது. இதனால் டெஸ்லா அந்தப் பணம் வேண்டாம் என்று ஒப்பந்தத்தை மாற்றி அமைத்தார் எனக் கூறப்படுகிறது.

ஆறு வருடங்கள் கழித்து வெஸ்டிங்ஹவுஸ் டெஸ்லாவின் காப்புரிமையை ஜெனரல் எலக்ட்ரிக் நிறுவனத்துடன் கையெழுத்திடப்பட்ட காப்புரிமை பகிர்வு ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக மொத்தமாக வாங்கியது.

டெஸ்லா தனது ஏசி காப்புரிமைகளுக்கு உரிமம் வழங்கிய பணம் அவரை பணக்காரர் ஆக்கியதுடன், அவரின் சொந்த நலன்களைத் தொடர அவருக்கு நேரத்தையும் நிதியையும் கொடுத்தது.

1889 கோடையில், டெஸ்லா பாரிஷில் 1889 எக்ஸ்போசின் யுனிவர்செல்லுக்குச் சென்று ரேடியோ அலைகள் உட்பட மின்காந்த கதிர்வீச்சு இருப்பதை நிரூபித்த ஹென்ரிச் ஹெர்ட்ஸின் 1886 - 1888 சோதனைகளைக் கற்றுக்கொண்டார். டெஸ்லா இந்த புதிய கண்டுபிடிப்பை புத்துணர்ச்சியூட்டுவதாக கண்டறிந்து அதை முழுமையாக ஆராய முடிவு செய்தார்.

இந்த சோதனைகளை மீண்டும் மீண்டும், பின்னர் விரிவாக்கும் போது, டெஸ்லா ஒரு மேம்பட்ட ஆர்க் லைட்டிங் அமைப்பின் ஒரு பகுதியாக அவர் உருவாக்கி வந்த ஒரு அதிவேக மின்மாற்றி மூலம் சுருளை இயக்க முயன்றார். ஆனால் அதிக அதிர்வெண் மின்னோட்டம், அதிக வெப்பம் காரணமாக காப்பு உருகியது. இந்த சிக்கலை சரிசெய்ய டெஸ்லா ஊசலாடும் மின்மாற்றியை கொண்டு வந்தார். பின்னர் டெஸ்லா சுருள் என்று அழைக்கப்பட்டது. இது உயர் மின்னழுத்தம், குறைந்த மின்னோட்டம், அதிக அதிர்வெண் மாற்று - மின்னோட்டம் மின்சாரம் தயாரிக்க பயன்படக் கூடியதாக இருந்தது.

30 ஜூலை 1891 அன்று, 35 வயதில், டெஸ்லா அமெரிக்காவின் குடிமகனாக ஆன அதே ஆண்டில், அவர் தனது டெஸ்லா சுருளுக்கு காப்புரிமை பெற்றார்.

1893 ஆம் ஆண்டில், நயாகரா ஃபால்ஸ் கட்டுமான நிறுவனத்திற்கு தலைமை தாங்கிய எட்வர்ட் டீன் ஆடம்ஸ், நீர்வீழ்ச்சியில் உற்பத்தி செய்யப்படும் மின்சக்தியை அனுப்ப எந்த அமைப்பு சிறந்தது என்று டெஸ்லாவின் கருத்தை கேட்டார். பல ஆண்டுகளாக, நீர்வீழ்ச்சியால் உற்பத்தி செய்யப்படும் மின்சக்தியை எவ்வாறு பயன்படுத்துவது என்பது குறித்து தொடர்ச்சியான திட்டங்கள் மற்றும் போட்டிகள் நடத்தப்பட்டன.

டெஸ்லா ஆடம்ஸுக்கு இரண்டு கட்ட அமைப்பு மிகவும் நம்பகமானதாகவும், இரண்டு கட்ட மாற்று மின்னோட்டத்தைப் பயன்படுத்தி ஒளிரும் பல்புகளை ஒளிரச் செய்ய வெஸ்டிங்ஹவுஸ் அமைப்பு இருப்பதாகவும் அறிவுறுத்தினார்.

நயாகரா நீர்வீழ்ச்சியில் இரண்டு கட்ட ஏசி (AC) ஜெனரேட்டிங் சிஸ்டத்தை கட்டியெழுப்ப வெஸ்டிங்ஹவுஸ் எலக்ட்ரிக் நிறுவனத்திற்கு டெஸ்லாவின் ஆலோசனை மற்றும் கொலம்பிய கண்காட்சியில் வெஸ்டிங்ஹவுஸ் ஆர்ப்பாட்டத்தின் அடிப்படையில் ஒரு முழுமையான ஏசி அமைப்பை உருவாக்க முடியும் என்று நிறுவனம் ஒப்பந்தம் செய்தது. அதே நேரத்தில், ஏசி (AC) விநியோக முறையை உருவாக்க ஜெனரல் எலக்ட்ரிக் நிறுவனத்திற்கு மேலும் ஒப்பந்தம் வழங்கப்பட்டது.

1890 களின் நடுப்பகுதியில், நிகோலா டெஸ்லா, ஒரு சிறந்த மின் பொறியியலாளர். இவர் உருவாக்கிய மாற்று மின்னோட்ட அமைப்பு மூலம், நயாகரா நீர்வீழ்ச்சியிலிருந்து அதிக தூரத்திற்கு மின்சாரம் அனுப்பப்பட்டது.

டெஸ்லாவின் கண்டுபிடிப்புக்கு முன்னர், மின்சாரம் நேரடி மின்னோட்டம் (டிசி) மூலம் 100 ஜெஙங்களுக்கு மேல் அனுப்பப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஏசி சக்தியின் அவரது கண்டுபிடிப்பு உலகம் முழுவதும் மின்சாரம் பயன்படுத்தும் முறையை மாற்றியது.

இவரது கண்டுபிடிப்புகள் பல இருந்தாலும், மின்சாரம் பயன்படுத்தும் முறையை மாற்றியமைத்து, புதிய வழியமைத்த இவருக்கு நயாகரா நீர்வீழ்ச்சியின் (அமெரிக்க மற்றும் கனடா) இரு பகுதிகளிலும் சிலை நிறுவப்பட்டு கௌரவிக்கப்பட்டுள்ளது.

# 3 ஆம் தர மாணவனுக்கு வவுனியாவில் கொரோனா

வவுனியா ஓமந்தை பகுதியில் அமைந்துள்ள பிரபல பாடசாலையில் தரம் 3 இல் கல்வி பயிலும் மாணவன் ஒருவனுக்கு கொவிட் தொற்று உறுதி செய்யப்பட்டது.

நாட்டில் முன்னெடுக்கப்பட்டிருந்த தொடர் முடக்கநிலை நீக்கப்பட்டு ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கான பாடசாலை கல்விச் செயற்பாடுகள் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

இந்நிலையில் வவுனியா ஓமந்தை பகுதியில் அமைந்துள்ள பிரபல பாடசாலை ஒன்றில் தரம் மூன்றில் கல்வி பயிலும் மாணவன் ஒருவனுக்கு முன்னெடுக்கப்பட்ட பரிசோதனையில் கொவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து குறித்த மாணவனின் வகுப்பறையில் இருந்த ஏனைய மாணவர்களுக்கு இன்று பி.சி.ஆர். பரிசோதனைகள் முன்னெடுக்கப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியாவில் ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு கொரோனா தொற்று பீடிக்கும் எண்ணிக்கை அதிகரித்து செல்வதால் பாடசாலைக்கு மாணவர்களை அனுப்புவதில் பெற்றோர்கள் மத்தியில் அச்சநிலை ஏற்பட்டுள்ளது.

# மருத்துவக் கருத்தமர்வு

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள "யாவர்க்கும் நலம்" எனும் மருத்துவக் கருத்தமர்வானது வாராந்தம் பிரதி சனிக்கிழமை தோறும் மாலை 7.00 மணி 9.00 மணி வரை Zoom செயலி ஊடாக இடம் பெறவுள்ளது. எனவே இக்கருத்தமர் வில் அனைவரும் பங்கேற்று பயன் பெறுமாறு கேட்கப்பட்டுள்ளது.

Meeting ID;89985 282023
Pass code: 354485

# கரவெட்டியில் மின்சாரம் தாக்கி குடும்பஸ்தர் சாவு!

(ந.லோகதயாளன்)

கரவெட்டியில் மின்சாரம் தாக்கி குடும்பஸ்தர் ஒருவர் பரிதாபகரமாக சாவடைந்துள்ளார்.

துன்னாலை, ஆண்டாள்வளவைச் சேர்ந்த வி.விஜிதரன் (வயது - 33) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தார்

கரவெட்டி வடக்கில் உள்ள வீடொன்றில் நேற்று பிற்பகல் வீட்டுக் கூரை வேலையில் ஈடுபட்டிருந்தபோது தகரம் ஒன்றில் ஏற்பட்ட மின் ஒழுக்கு காரணமாகவே அவர் உயிரிழந்தார் என்று ஆரம்பகட்ட விசாரணைகளின் அடிப்படையில் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் நெல்லியடிப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# வவுனியா செட்டிகுளம் பிரதேசத்தில் பனம் விதைகள் நடும் செயற்றிட்டம்





பனை விதைகள் நாட்டும் செயற்திட்டம் பனை அபிவிருத்திச்சபையால் நிதியளிக்கப்பட்டு செட்டிகுளம் கமநல சேவைகள் நிலையைத்தால் ஒரு லட்சத்து 50 ஆயிரம் பனம் விதைகள் நடும் திட்டம் நடைபெறுகின்றது.

இந்தச் செயற்திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு கடந்த புதன்கிழமை அன்று மாலை 3 மணிக்கு வெங்கலசெட்டிக் குளம் வவுனியாவில் நடைபெற்றது.

செட்டிகுளம் பகுதியில் யானைகளின் அட்டகாசம் அதிகரித்துள்ளது. மக்களின் உடைமைகளை யானைகள் சேதப் படுத்தி வருகின்றன.

இந்நிலையில், யானைகளின் நடமாட்டத்தைக் குறைக்கும் வகையில் யானை வேலி அமைப்பதற்காகவே இந்த ஒரு லட்சத்து 50 ஆயிரம் பனம் விதைகள் நடப்படுகின்றமை குறிப்பிடத் தக்கது.

# இரண்டு தடுப்பூசிகளும் செலுத்திய 700 பேர் இலங்கையில் உயிரிழப்பு!

கொழும்பு, நவ. 06

இலங்கையில் கொவிட் இறப்புகள் பற்றிய கணக்கெடுப்பில் இரண்டு தடுப்பூசிகளையும் பெற்ற 700 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர் என்று தெரியவந்துள்ளது.

செப்டெம்பர் மாதம் வரையில் ஏற்பட்ட மொத்த கொவிட் இறப்புகள் தொடர்பில் இந்த கணக்கெடுப்பு நடத்தப்பட்டதாகக் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் சுவாசப் பிரிவின் விசேட வைத்திய நிபுணர் ஆஷா சமரநாயக்க தெரிவித்துள்ளார்.

செப்டெம்பர் நடுப்பகுதியில் 11 ஆயிரத்து 699 மரணங்கள் தொடர்பில் கணக்கெடுக்கப்பட்டன. இதில் 714 பேருக்கு 2 தடுப்பூசிகளும் போடப்பட்டமை தெரியவந்துள்ளது. இது 6.01 வீதமாக மதிப்பிடப்பட்டுள்ளது.

அவர்களுக்கு பல்வேறு உடல் நல பிரச்சினைகள் காணப்பட்டன. தொற்றா நோய் உள்ளவர்கள் தடுப்பூசிகளைப் பெற்ற போதிலும் உடல் நல பாதிப்புக்குள்ளாகியிருந்தனர். இதனாலேயே மரணங்கள் ஏற்பட்டுள்ளன என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir

# ஹக்கீம், மனோவின் கருத்துக்கு ஆனந்தசங்கரி பாராட்டு தெரிவிப்பு

## 60 வருடத்துக்கும் மேலாக அரசியலில் ஈடுபடும் தன்னிடமும் கருத்துக்களை கோர கோரிக்கை

"சமீபத்தில் தமிழ்க் கட்சிகளின் கலந்துரையாடலில் தாங்கள் இருவரும் கலந்து கொண்டு தெரிவித்த கருத்துக்களை வரவேற்கின்றேன். தமிழ் முஸ்லிம் உறவுகள் ஒன்றிணைந்து பலமான அமைப்பாக உருவாக வேண்டும் என்ற தங்கள் இருவரின் கருத்துக்களும் காலத்தின் தேவை என்பதை தமிழர் விடுதலைக் கூட்டணி நன்கு உணர்ந்துள்ளது. தங்களின் முயற்சி வெற்றி பெற வேண்டும் என நான் வாழ்த்துகிறேன். கடந்த 60 ஆண்டுகளுக்கு மேலாக அரசியலில் ஈடுபட்டு பல சவால்களுக்கு முகம்கொடுத்து உயிரைப் பணையம் வைத்து இன்று வரை துணிச்சலுடன் செயற்பட்டு வரும் என்னைப் போன்ற ஒரு ஜனநாயக வாதியிடம் இருந்தும் கருத்துக்களைப் பெற வேண்டும் என்று உங்களுக்குத் தோன்றவில்லையா?"

- இவ்வாறு குறிப்பிட்டு தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகமும் மூத்த தமிழ் அரசியல் வாதியுமாகிய வீ.ஆனந்தசங்கரி, ஹக்கீம், மனோ கணேசன் ஆகியோருக்குப் பகிரங்க மடல் எழுதியுள்ளார்.

அந்த மடலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

சமீபத்தில் தமிழ்க் கட்சிகளின் கலந்துரையாடலில் தாங்கள் இருவரும் கலந்து கொண்டு தெரிவித்த கருத்துக்களை வரவேற்கின்றேன். தமிழ் முஸ்லிம் உறவுகள் ஒன்றிணைந்து பலமான அமைப்பாக உருவாக வேண்டும் என்ற தங்கள் இருவரின் கருத்துக்களும் காலத்தின் தேவை என்பதை தமிழர் விடுதலைக் கூட்டணி நன்கு உணர்ந்துள்ளது. தங்களின் முயற்சி வெற்றி பெற வேண்டும் என நான் வாழ்த்துகிறேன்.

ஆனால், தமிழ் முஸ்லிம் மக்களின் உறவுகள் பற்றியும் சிறுபான்மை இனத்தவர்களின் பிரச்சினைகள் பற்றியும் முதன் முதலாக இவ்வாறான பிரச்சினைகளுக்கு ஒரு தீர்வு வேண்டும் என்று குறிப்பாக இந்தியா உட்பட சர்வதேச சமூகத்துக்கு எடுத்துச்சென்ற தமிழர் விடுதலைக் கூட்டணியை தாங்கள் இருவரும் மறந்தது எனக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது. தமிழர் விடுதலைக் கூட்டணி உருவாகிய நாள் தொடங்கி பல்வேறு இன் னல்களையும் சந்தித்து பல தலைவர்களை துப்பாக்கி குண்டுகளுக்கும் தற்கொலை குண்டுதாரிகளுக்கும் பலிகொடுத்து இன்று வரை ஜனநாயக ரீதியில் இயங்கிக் கொண்டிருக்கும் ஒரு கட்சி என்பது தங்களின் ஞாபகத்துக்கு வராதது எனக்கு வியப்பை தருகின்றது.

இலங்கை அரசின் மனித உரிமை மீறல்கள் மற்றும் ஜனநாயக விரோதச் செயல்களைத் தட்டிக்கேட்பதற்கு ஒரு ஜனநாயக அமைப்பால் மட்டுமே முடியும். ஆனால் தாங்கள் இருவரும் கலந்துகொண்ட கலந்துரையாடலில் ஏனையவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்பதை நீங்கள் ஒரு கணம் சிந்தித்து பார்க்க வேண்டும்.

2004 ஆம் ஆண்டு தேர்தல் ஜனநாயகத்தை முற்று முழுதாக குழிதோண்டிப்புதைத்து விட்டு விடுதலைப் புலிகளின் முழு ஒத்துழைப்புடனும், ஆசியுடனும் தேர்தலில் களமிறங்கி வாக்குச்சாவடிகளில் அவர்களின் ஆதரவாளர்களும் விடுதலைப் புலிகளும் நடந்து கொண்டவிதம் உலகத்தமிழர்களையே வெட்கித்தலை குனிய வைத்தது என்பதை எவ்வாறு மறந்தீர்கள்?

அதுமட்டுமல்ல, 2009 ஆம் ஆண்டு இறுதி யுத்தத்தில் விடுதலைப் புலிகளும் தமிழ் மக்களும் அழிவதை வேடிக்கை பார்த்துவிட்டு இன்று மனித உரிமைகள் பற்றிப் பேசுகிறார்கள். 2015 ஆம் ஆண்டு நீங்கள் சேர்ந்து ஆதரவு கொடுத்த நல்லாட்சி அரசாங்கத்தில் எதிர்க்கட்சித் தலைவர் பதவி சுகத்தை அனுபவித்துக் கொண்டிருந்தார்கள். அப்போது சிறுபான்மை மக்களின் பிரச்சினைகள் பற்றி ஏன் பேசி ஒரு முடிவுக்கு வரவில்லை. பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கக் கூடிய ஒரு சந்தர்ப்பம் இருந்தும் கண்டும் காணாமல் விட்டு விட்டு இப்போது மட்டும் எங்கிருந்து ஞானம் வந்தது? பதவிகள் வந்த போது அவர்களின் வசதிவாய்ப்புக்களை பெருக்கிக் கொண்டார்களே தவிர, தமிழ் மக்களின் பிரச்சினைகள் அவர்களின் கண்ணை மறைத்துவிட்டது.

இவ்வாறானவர்களிடம் கலந்துரையாடுவது என்பது உங்களுக்கு பெரும் தர்மசங்கடத்தை ஏற்படுத்தவில்லையா? ஜனநாயக விரோத சக்திகளுடன் கலந்துரையாடி மீண்டும் மீண்டும் தமிழ் மக்களுக்கு தலைகுனிவை ஏற்படுத்தப் போகின்றீர்களா?

கடந்த 60 ஆண்டுகளுக்கு மேலாக அரசியலில் ஈடுபட்டு பல சவால்களுக்கு முகம்கொடுத்து உயிரைப் பணயம் வைத்து இன்று வரை துணிச்சலுடன் செயற்பட்டு வரும் என்னைப் போன்ற ஒரு ஜனநாயக வாதியிடம் இருந்தும் கருத்துக்களைப் பெற வேண்டும் என்று உணர்வு உங்களுக்கு எழவில்லையா? அல்லது எவராவது தடுத்தார்களா? எது எவ்வாறாயினும் தங்களின் செயற்பாடுகள் வெற்றி பெறுவதற்கு என்னைப் போன்ற ஜனநாயக செயற்பாடுகளுடன் செயற்படும் ஒரு சிலரின் கருத்துக்களையும் பெற்று தாங்கள் இருவரும் இனியாவது சிந்தித்து செயற்படுவீர் கள் என எதிர்பார்க்கின்றேன். - என்றுள்ளது.

# சீரற்ற வானிலை காரணமாக இதுவரையில் ஐவர் உயிரிழப்பு!

நாட்டில் ஏற்பட்டுள்ள சீரற்ற வானிலை காரணமாக இதுவரையில், ஐவர் உயிரிழந்துள்ளமையுடன், 2 பேர் காயமடைந்துள்ளனர்.

அத்தோடு ஒருவர் காணாமல்போயுள்ளார் என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கு அண்மையாகக் காணப்பட்ட குறைந்த அழுத்தப் பிரதேசம் காரணமாக நாட்டில் கடந்த சில நாள்களாகக் கடும் மழையுடனான காலநிலை நிலவியது.

இந்த நிலையில், சீரற்ற வானிலையால் 12 மாவட்டங்களில் 1, 136 குடும்பங்களைச் சேர்ந்த 4 ஆயிரத்து 364 பேர் பாதிப்புக்குள்ளாகியிருக்கின்றனர் என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

அத்துடன், இந்த அனர்த்தத்தால் 5 உயிரிழப்புக்கள் பதிவாகியுள்ள நிலையில் இருவர் வெள்ளத்தில் சிக்கியும் இருவர் மின்னல் தாக்குதலுக்கு உள்ளாகியும் உயிரிழந்துள்ளனர்.

மேலும், 12 வீடுகள் முழுமையாகவும், 630 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

# வட்டவளையில் பொல்லால் தாக்குதல் மூன்று பிள்ளைகளின் தாய் கொலை

வட்டவளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வட்டவளை மவுன்ஜீன் தோட்டத்தில் பொல்லால் அடித்து மூன்று பிள்ளைகளின் தாய் கொலை செய்யப்பட்டுள்ளார் எனவும் சந்தேகத்தின் பேரில் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

அயல் குடும்பத்தாருக்கும் தனது குடும்பத்துக்கும் கடந்த வியாழக்கிழமை இரவு ஏற்பட்ட கைகலப்பை விளக்குவதற்கு சென்ற தாயே இவ்வாறு பொல்லால் அடிபட்டு உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் மூன்று பிள்ளைகளின் தாயான சந்திரசேகரன் கலாதேவி (வயது 57) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என வட்டவளை பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரை ஹற்றன் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

மேலும் இந்தச் சம்பவம் தொடர்பாக ஹற்றன் கைரேகை அடையாளப் பிரிவு மற்றும் வட்டவளை பொலிஸார் இணைந்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# வாழ்வகத் தலைவர் ரவீந்திரனுக்கு இம்முறை யாழ்.விருது கிடைத்தது!



(கலையமுதன், ந.லோகதயாளன்)

யாழ்.மாநகரசபை சைவசமய விவகாரகுழுவினரால் வருடந்தோறும் வெளியிடப்பட்டு வரும் நல்லைக் குமரன் மலரின் 29 ஆவது இதழ் வெளியீடும், சமய சமூகப் பணியாற்றும் ஒருவருக்கு வருடம் தோறும் வழங்கப்படும் யாழ் விருது வழங்கும் நிகழ்வும் நேற்று இடம்பெற்றன.

இந்த யாழ். விருதுவழங்கும் நிகழ்வில் இம்முறை யாழ்.தேசியக் கல்வியியற் கல்லூரி விரிவுரையாளரும், வாழ்வகம் விழிப்புலனற்றோர் இல்லத்தில் மாணவராக இருந்து, செல்வி அன்னலட்சுமி அம்மாவின் மறைவுக்குப் பிறகு, அதனைத் தலைமை தாங்கி சிறப்பாக நடத்திவரும் வாழ்வகத்தின் தலைவர் ஆ. இரவீந்திரனுக்குக் கிடைக்கப்பெற்றுள்ளது.

# பண்டோரா ஆவணங்களில் மற்றுமொரு இலங்கையர்!

வெளியிடப்படாத சொத்துக்களைப் பெற்ற பல நபர்களின் விவரங்களை வெளிப்படுத்திய பண்டோரா ஆவணங்களில் மற்றுமொரு இலங்கைத் தமிழர் பற்றிய விவரங்கள் கசிந்துள்ளன.

இலங்கையில் பதவியிலிருந்த இரண்டு ஜனாதிபதிகள் மற்றும் ஒரு பிரதமரின் ஆலோசகராக இருந்த இராமலிங்கம் பாஸ்கரலிங்கம் என்பவரே அவர் தெரிவிக்கப்படுகின்றது.

பிரிட்டிஷ் விர்ஜின் தீவுகளில் பதிவுசெய்யப்பட்ட ஓர் அறக்கட்டளைக்குச் சொந்தமான சிங்கப்பூரை தளமாகக் கொண்ட நிறுவனம் மூலம் நிறுவனத்துக்கு இராமலிங்கம் பாஸ்கரலிங்கம், ஹொரைசன் கொலிஜ் ஒஃப் பிசினஸ் அண்ட் டெக்னோலஜி நிறுவனத்தின் மூலம் நிதியளித்தார் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிறுவனம், ஜனவரி 2008 இல் ஒரு தனியார் வரையறுக்கப்பட்ட பொறுப்பு நிறுவனமாகப் பதிவு செய்யப்பட்டது.

இதுதவிர, தனியார் நிறுவனத்தில் முதலீடு செய்து, இங்கிலாந்தில் சொத்து வாங்கியுள்ளார். சர்வதேச ஊடகவியலாளர்களின் சர்வதேச கூட்டமைப்பு தலைமையிலான பண்டோரா ஆவணங்கள் மூலம் இது முதல் முறையாக வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

அதன்படி, பண்டோரா ஆவணங்கள் மூலம் வெளிப்படுத்தப்படும் மூன்றாவது இலங்கையர் இவர். முன்னதாக, முன்னாள் இராஜாங்க அமைச்சர் நிரூபமா ராஜபக்ஷ மற்றும் அவரது கணவர் திருகுமார் நடேசன் ஆகியோரின் பெயர்களும் பண்டோரா ஆவணங்களில் வெளியாகி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பொதுமக்கள் சார் அரசை நிறுவுவதற்கு 16 ஆம் திகதி பாரிய மக்கள் பேரணி!

## சஜித் அறைகூவல்

நாட்டைவிற்கவேண்டும்என்றால் மக்களுடன் சேர்ந்தே விற்க வேண்டும் என்று மக்கள் கோரும் அளவிற்கு தற்போதைய அரசாங்கம்நாட்டைபாதாளத்தில் தள்ளியுள்ளது எனஎதிர்க்கட்சித்தலைவர்சஜித் பிரேமதாஸதெரிவித்துள்ளார்.

தேசிய சொத்துக்களையும், தேசிய வளங்களையும் அற்ப நோக்கங்களுக்காக விற்று இந்த நாட்டை ஓர் ஏல நாடாக அரசாங்கமே மாறியுள்ளதாகவும் நாட்டைக் காப்பாற்ற இந்த நாட்டு மக்கள் முன்நிற்பார்களா இல்லையா என்பதை தீர்மானிக்க வேண்டிய தருணம் வந்துள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார். ஐக்கிய மக்கள் சக்தியின் கொலன்னாவ தேர்தல் தொகுதியின் பிரதம அமைப்பாளரும்,ஐக்கிய மக்கள் சக்தியின் இணை ஊடகப் பேச்சாளருமான எஸ்.எம். மரிக்கார் ஏற்பாடுசெய்திருந்த ஆர்ப்பாட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கலந்து கொண்டார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் இணை ஊடகப் பேச்சாளர் மனு நாணயக்காரவும் இந்த நிகழ் வில் கலந்து கொண்டார். தற்போதைய அரசாங்கத்தின் தன்னிச்சையான செயற்பாடுகளால் நாடளாவிய ரீதியில் மக்கள் விரக்தியில் உள்ளனர் எனவும், தாங்கள் சுதந்திரமாக வாழக் கூடிய நாட்டை உருவாக்குமாறும் ஆர்ப்பாட் டத்தில்ஈடுபட்டமக்கள்கோரிக்கை விடுத்தனர். மக்களின் இன்னல்களைப் போக்குவதற்காக எதிர்வரும்16ஆம்திகதிகொழும்பில் பாரிய மக்கள் பேரணியொன்றை மேற்கொள்ளத் தயார் என தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், அந்த மக்கள் பலத்தின் ஊடாக இந்த நாட்டில் பொது மக்கள் சார் அரசாங்கம் ஒன்று உருவாகும் என்றும் அவர் கூறினார்.

### பெரும் போராட்டத்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தலைவருமான சஜித் பிரேமதாஸ தலைமையில் கொழும்பில் நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

பொருள்களின் விலைகள் தொடர்ச்சியாக அதிகரிக்கப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும், விவசாயிகளின் பிரச்சினைக்கு உடன் தீர்வை வழங்குமாறும், அதிபர், ஆசிரியர்களின் போராட்டத்துக்கு ஆதரவுதெரிவித்துமே இந்தப்போராட்டம்ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது.

அத்துடன், தேசிய வளங்கள் வெளிநாடுகளுக்கு விற்பனை செய்யப்படுவதற்கும் கடும் எதிர்ப்பு வெளியிடப்படவுள்ளது.

### நிர்வாகியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆரம்பித்து சிலகாலங்கள்தான் – அச்சிடப்படும் பிரதிகளின் எண்ணிக்கையும் ஒப்பீட்டளவில் குறைவுதான். ஆனாலும் உலகெங்கும் பரந்து விரிந்திருக்கின்ற வாசகர் வட்டம்தான் என் பெருமைக்குக் காரணம். எனது ஊடகத்துறை குருவான திரு.வித்தியாதரனால் ஆரம்பிக்கப்பட்ட இந்த 'காலைக்கதிர்' எமது நிறுவனத்தால் பொறுப்பேற்கப்பட்ட பின்னரும் அவரையே பிரதம ஆசிரியராக கொண்டு தொடர்ச்சியாக உங்களின் கரங்களில் தவழவைப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

இன்றைய நிலையில் ஒரு பத்திரிகை நின்று, நிலைப்பது என்பது பெரும் சவாலாகும். அத்தகு சவால்கள் அனைத்தையும் கடந்து தலை நிமிர்ந்து நிற்கும் காலைக்கதிர், தமிழ் ஊடகப்பரப்பில் முதன்மையான ஊடகங்கள் பல கருக் கொண்டு, உருப்பெற்று இருக்கின்ற இந்த நேரத்தில், செய்தித் துறையில் தனக்கென ஒரு தனி முத்திரையைப் பதித்து நிற்கிறது என்றால் அதற்குக் காரணம் வாசகப் பெருமக்களாகிய நீங்கள் எம் மீது காட்டிய அன்பும் அக்கறையும்தான். நள்ளிரவைக் கடந்து அதிகாலையிலேயே உங்கள் கணினித்திரைகளிலும், கையடக்கத் தொலைபேசிகளிலும் காலைக்கதிரைக் காலையிலும், மாலையிலுமாக வாசித்து, அதன் பால் தங்கள் ஆக்கபூர்வமான கருத்துக்களைப் பரிமாறு நீங்கள் நீட்டிய ஆதரவுக் கரங்களினால்தான், எவ்வளவோ நெருக்கடிகள் வந்த போதிலும் தளராது பயணிக்க எங்களால் முடிந்தது.

வாசகர்களைப் போலவே, என்றும் எங்கள் வெற்றிப் பாதையில் மறக்க முடியாதவர்கள் நமது விளம்பரதாரர்கள். நீங்கள் இல்லாமல் நாங்கள் இல்லை. ஐந்து ஆண்டுகளைக் கடந்து ஆறாவது ஆண்டுக்கு அடியெடுத்து வைக்கின்ற வேளையில், தொடர்ந்தும் உங்கள் ஆதரவு துணை நிற்கும் என்ற நம்பிக்கையோடு உங்கள் அனைவரையும் நன்றியோடு வணங்கிப் பயணத்தைத் தொடர்கிறோம்.

அதுமட்டுமல்லாமல் கடந்த இடர்மிகுந்த காலங்களிலும் தற்போதுள்ள கொரோனோத் தொற்றுப் பேரிடரிலும் எமது பத்திரிகை தொடர்ச்சியாக வாசகர்களை சென்றடைவதற்கு உறுதுணையாக இருக்கும் எமது நிறுவன ஊழியர்களிற்கும் இன்றைய இந்த நாளிலே நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்த் தேசியப் பரப்பில் காலைக்கதிரின் வகிபாகமும், செய்தித் துறையில் அதன் வீச்செல்லையும், சரியானதைத் தயங்காமல் சொல்கின்ற துணிவான ஆசிரிய பீடமும்தான் சவால்களைக் கடந்த அதன் சாதனைப் பயணத்துக்கு வித்திட்டன. உங்கள் நம்பிக்கை வீண்போகா வண்ணம் பயணிப்பதற்கு இந்த வேளையில் திடசங்கற்பம் பூண்டு நிற்கிறோம்.

ஆயிரம் கைகள் மறைத்து நின்றாலும் ஆதவன் மறைவதில்லை...
ஆணைகள் இட்டே யார் தடுத்தாலும் அலை கடல் ஓய்வதில்லை...

அன்புடன்,
சி. அனுராஜ்
நிர்வாக இயக்குநர்,
காலைக்கதிர் பத்திரிகை மற்றும் பசுமை ஊடக இல்லம்)

# பொது இடங்களில் தடுப்பூசி அட்டை நடைமுறைப்படுத்தல் கட்டாயமாகும்?

## இராணுவ தளபதி வெளியிட்ட தகவல்

பொது இடங்களுக்கு செல்லும் போது கொவிட் தடுப்பூசி அட்டைக் கட்டாயமாக்குவது தொடர்பில் கலந்துரையாடல் மட்டத்திலேயே உள்ளதென இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

நாட்டில் மக்கள் தொகையில் நூற்றுக்கு 6 வீதமானோருக்கு எதிர்வரும் இரண்டு வாரங்களுக்குள் இரண்டாவது தடுப்பூசி வழங்கப்படவுள்ளதாக இராணுவத் தளபதி குறிப்பிட்டுள்ளார்.

எனவே பொது இடங்களுக்கு செல்லும் போது தடுப்பூசி அட்டையைக் கட்டாயமாக்குவது தொடர்பில் எதிர்வரும் நாள்களில் இடம்பெறும் கொவிட் தடுப்பு செயலணி கூட்டத்தில் கலந்துரையாடப்படும் என இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

உலக நாடுகளில் இந்தத் திட்டம் வெற்றிகரமாக உள்ளதெனத் தகவல் வெளியாகி உள்ளது. எப்படியிருப்பினும்சிலர்இரண்டாவதுதடுப்பூசிகளை இன்னமும் செலுத்திக் கொள்ளாமையால் உடனடியாக இந்த நடவடிக்கைக்கு செல்ல முடியவில்லை என இராணுவத் தளபதி சுற்றிக்காட்டியுள்ளார்.

இந்த விடயங்கள் அனைத்தும் ஆராய்ந்து எதிர்வரும் நாள்களில் இது தொடர்பான இறுதி முடிவு அறிவிக்கப்படும் என இராணுவத் தளபதி மேலும் தெரிவித்துள்ளார்.

# 200 முதல் 300 ரூபா வரையில் மரக்கறிகளின் விலை எகிறல்!

நாடுமுழுவதும்உள்ளவர்த்தக நிலையங்களில், மரக்கறிகளின் விலை அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. சில சிறப்பு அங்காடிகளில், போஞ்சி, கரட், லீக்ஸ் உள்ளிட்ட மரக்கறிகள் ஒரு கிலோவின் விலை 200 முதல் 300 ரூபா வரையில் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதேநேரம், விசேட பொருளாதார மையங்களிலும்கொழும்புமரக்கறிசந்தையிலும்மரக்கறிகளின் விலைகள் அதிகரித்துள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் மரக்கறிகளின் சில்லறை விலைகளும் அதிகரித்துள்ளதாக, நாடு முழுவதும் சில்லறை மரக்கறி வர்த்தகத்தில் ஈடுபடும் வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர்.

### இராஜாங்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஈடுபட்டனர்.

யாழ்ப்பாணத்துக்கு நேற்று விஜயம் மேற்கொண்ட தொல்பொருள் இராஜாங்க அமைச்சர் வேரம்பிட்டிப் பகுதிக்கும் வந்தார். அங்கு ஏற்கனவே தொல்பொருள் சின்னங்கள் காணப்படுகின்றன என்று தொல்பொருள் திணைக்களத்தினரால் அடையாளப்படுத்தப்பட்ட இடத்தை அவர் பார்வையிடச் சென்றார்.

இந்தத் தகவல் வெளியானதால் அப்பகுதியில் குறித்த தொல்பொருள் சின்னங்கள் காணப்படுகின்றன எனத் தெரிவிக்கப்பட்ட காணியின் உரிமையாளர் மற்றும் பொதுமக்கள் என 300 வரையான மக்கள் கூடி எதிர்ப்பு நடவடிக்கையை மேற்கொண்டனர். இதன்போது அவ்விடத்தில் ஊர்காவற்றுறை மற்றும் வட்டுக்கோட்டை பொலிஸார் குவிக்கப்பட்டு காத்திருந்தனர்.

மாலை 4 மணியளவில் அந்த இடத்துக்கு இராஜாங்க அமைச்சர் வருகை தந்தபோது குழப்ப நிலை ஏற்பட்டது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் இராஜாங்க அமைச்சர் மற்றும் அதிகாரிகள்ஆகியோர்பேச்சுநடத்தினர். இதன்போது காணி உரிமையாளர் எனத் தெரிவித்து அதன் பத்திரத்தை குறித்த நபர் வழங்கிய வேளை அதனை ஆராய்ந்த அதிகாரிகள், இந்த இடம் தனக்கு உரித்தானது என ஒரு வைத்தியர் ஏற்கனவே காணிப் பத்திரத்தை வழங்கியுள்ளார் எனத் தெரிவித்தனர்.

இறுதியில் இரு பத்திரங்களையும் பரீட்சித்து இறுதி முடிவு எடுக்கப்படும் என்று தெரிவித்த அதிகாரிகள், தொல்லியல் தொடர்பான அடையாளங்களையும் பார்வையிட்டுச் சென்றனர்.

### மீண்டும் அச்சுறுத்தும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தொற்றிலிருந்து குணமடைந்துள்ளனர்.

இதேவேளை, நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் 15 பேர் சாவடைந்துள்ளனர்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் நேற்றுமுன் தினம் இந்த உயிரிழப்புகள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

இவ்வாறு உயிரிழந்தவர்களில் 6 ஆண்களும், 9 பெண்க ளும் அடங்குகின்றனர்.

இதற்கமைய நாட்டில் இதுவரையில் கொரோனாத் தொற்றால் சாவடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 13 ஆயிரத்து 821 ஆக அதிகரித்துள்ளது என அரச தகவல் திணைக்களம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

## கந்தசஷ்டி சிறப்புப் பிரார்த்தனை


## நிட்டூரம் வாராமல் நீ காப்பாய் முருகா!

வேலெடுத்து நீயும் வினையோட்டி நின்றாய்
விளையாட்டுப் பாலகனாய் பழமுதிர்த்தும் நின்றாய்
ஔவைக்குத் தத்துவத்தை அருமையாய் உரைத்தாய்
ஆறுபடை வீட்டைத் தேர்ந்தெடுத்தாய் முருகா!

மாறுபடு சூரர்தமை வழிக்குவரச் செய்தாய்
மயில்சேவ லாக்கியே மாற்றுவழி கண்டாய்
மாறுபட மனமுடையோர் வாழுகிறார் நிறைந்து
மனம்மாற்ற மயிலுகந்து வந்திடுவாய் முருகா!

கஷ்டமது போயகல கந்தசஷ்டி பிடிக்கின்றோம்
கர்மவினை அகன்றோட காலடியை நாடுகிறோம்
நித்தமுமே உன்வாசல் நாடியே வருகின்றோம்
நிட்டூரம் வாராமல் நீகாப்பாய் முருகா!

– மகாதேவ ஐயர்
ஜெயராமசர்மா –
(மேனாள் தமிழ்மொழிக் கல்வி
இயக்குநர்,
மெல்பேண்,
ஆஸ்திரேலியா)



### சமுதாயப் பொறுப்பும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ராஜபக்ஷ தெரிவித்திருக்கின்றார்.

அவரது வாழ்த்துச் செய்தி நேற்றுக் கிடைத்தது. அதில் அவர் தெரிவித்திருப்பவை வருமாறு:-

தமிழ் ஊடகப் பரப்பில் கடந்த ஐந்து ஆண்டுகளாகக் காத்திரமான பங்களிப்பை வழங்கி வரும் காலைக்கதிர் நாளிதழுக்கு அது ஆறாவது ஆண்டில் காலடி எடுத்து வைக்கும் இச்சமயத்தில் எமது வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மகிழ்கிறேன். அதன் பிரதம ஆசிரியர் என்.வித்தியாதரனை கடந்த இருபத்தியைந்து ஆண்டுகளாக ஒரு சிறந்த பத்திரிகையாளராக நான் அறிவேன். நாட்டு மக்களின் மன உணர்வுகளைத் துணிச்சலுடன் வெளிக்கொணர்ந்த பத்திரிகையாளர் அவர். எப்போதும் தமது மக்களின் நலனுக்காக விடயங்களை முன்னிறுத்தி கருத்துரைக்கும் பேனா போராளி அவர்.

நமது சகோதர இனங்களுக்கிடையில் புரிந்துணர்வையும், நட்புறவையும், சகோதரத்துவத்தையும் காலைக்கதிர் நாளிதழினால் கட்டியெழுப்ப முடியும் என நான் நம்புகிறேன்.

நாற்பது ஆண்டுகளுக்கு மேல் ஊடகத்துறையில் நிலைத்திருந்து, சகல தரப்புகளுடனும் நெருங்கி ஊடாடி, நட்புப் பாராட்டி,மக்களுக்கு ஊடகப் பணியாற்றிவரும் வித்தியாதரன் மீதும் அவரது ஊடகம் மீதும் இந்த நாட்டில் அமைதி, சமாதானம், ஐக்கியம், அபிவிருத்தி ஆகியவற்றின் மேம்பாட்டிற்காக உழைக்க வேண்டிய பெரும் கடப்பாடு உள்ளது.

அவற்றை நினைவூட்டி, காலைக்கதிர் நாளிதழுக்கும், அதன் நிர்வாகம் மற்றும் பணியாளர்களுக்கும் வாழ்த்துக்களை தெரிவிக்கிறோம். – இவ்வாறு பிரதமர் தம்முடைய வாழ்த்துச் செய்தியில் தெரிவித்திருக்கிறார்.